# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 27 வியாழக்கிழமை (10-05-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:165


## சமஷ்டித் தீர்வின் அடிப்படையிலேயே விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடக்கும்

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு,மே10

சமஷ்டி முறையிலான அரசமைப்புத் தொடர்பாக அரசாங்கம் தற்போது ஆராய்ந்து வருகின்றது. அதனை அடிப்படையாக வைத்தே புலிகளுடனான நேரடிப் பேச்சுக்கள் இடம்பெறும்.

- இவ்வாறு பிரதி நிதி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தன்னிடம் தெரிவித்ததாக தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் அடிப்படையிலிருந்தே ஆரம்பிக்கப்படும். அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களில் அரசின் கடந்தகால தீர்வு யோசனைகள் குறித்து பிரஸ்தாபிக்கப்படமாட்டாது. வேண்டுமாயின் அந்தத் தீர்வு யோசனைகளில் உள்ள நல்ல அம்சங்களை மீள் பரிசீலனை செய்யலாம்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவது மற்றும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் மஹிபால ஹேரத் மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணை

### ஐக்கிய தேசியக் கட்சி முஸ்தீபு

கொழும்பு,மே10

மாவனல்லவில் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டதற்குப் பின்னணியில் இருந்தார் என்று கூறப்படும் அமைச்சர் மஹிபால ஹேரத்துக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதற்கு ஐ.தே.கட்சி தீர்மானித்துள்ளது.

அரசுத் தரப்பிலுள்ள முஸ்லிம் எம்.பிக்கள், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் போன்றோரும் இந்தப் பிரேரணையை ஆதரிப்பார்கள் அல்லது எதிர்க்காமல் நடுநிலை வகிப்பார்கள் என ஐ.தே.கட்சி கருதுகின்றது.

இதனால் இந்தப் பிரேரணையைப் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும் என்று நம்பும் ஐ.தே.கட்சி, அது அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப்

(14ஆம் பக்கம் பார்க்க)

# மோதல் தவிர்ப்புத் திட்டம் குறித்து

# பாலசிங்கம் - சொல்ஹெய்ம் பேச்சு!

## நேற்று 3 மணி நேரம் நடந்தது

லண்டன்,மே10

**ஸ்ரீலங்கா இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் சமரச முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நேற்று லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து மூன்று மணி நேரம் பேச்சு நடத்தினார்.**

**சமாதான முன்முயற்சிகளுக்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தும் நடவடிக்கையாக அரசு - புலிகள் ஆகிய இருதரப்புகளுக்கும் இடையில் மோதல் தவிர்ப்பு ஏற்பாடு ஒன்றை உருவாக்குவதற்கான வாய்ப்புக் குறித்து இருவரும் பேசினர்.**

நேற்றைய பேச்சுக்கள் குறித்து அன்ரன் பாலசிங்கத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் அது குறித்து விளக்கமளிக்க மறுத்துவிட்டார்.

ஆனால் பேச்சுக்கள் மிகச் சாதகமானவையாகவும் ஆக்கபூர்வமானவையாகவும் (Positive and Constructive) இருந்தன என்றார் அவர்.

இரு தரப்பு யுத்தநிறுத்தம் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசி இறுதித் தீர்மானம் எடுப்பதற்காக எரிக் சொல்ஹெய்ம் விரைவில் கொழும்பு வருவார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஒன்றிணைந்து செயற்பட முஸ்லிம் எம்.பிக்கள் முடிவு

கொழும்பு,மே10

முஸ்லிம்கள் மீதான வன்முறை நடவடிக்கைகளுக்கு எதிராக அனைத்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் ஆகியோரும் ஒன்றிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்வது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

அகில இலங்கை ஜமாஅதுல் உலமா என்ற அமைப்பு நேற்றுக் கூட்டிய கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மாவனல்ல வன்முறைச் சம்பவங்களை அடுத்து சிங்கள - முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்டுள்ள முறுகல்நிலை மற்றும் தென்பகுதியில் தற்போது ஏற்பட்டுள்ள முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துணர்வு என்பன குறித்து ஆராய்வதற்காக நேற்று இந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது.

இதில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் ஆகியோர் கட்சி வேறுபாடின்றிக் கலந்துகொண்டனர். (ம-7)

## வந்தாறுமூலையில் நேரடி மோதல்; இரு தரப்பிலும் ஒவ்வொருவர் பலி!

மட்டக்களப்பு,மே10

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் உள்ள தீவு என்ற இடத்தில் நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையே நேரடி மோதல் இடம்பெற்றுள்ளது.

இந்த மோதலில் படையினர் தரப்பில் இராணுவ சார்ஜண்ட் ஒருவர் உயிரிழந்தார்; மற்றொரு சிப்பாய் காயமடைந்தார்.

மோதலின் பின்னர் தேடுதல் நடத்திய படையினர் அங்கிருந்து விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவருடைய சடலத்தை மீட்டு ஏறாவூர் வைத்திய சாலையில் ஒப்படைத்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

அச்சடலம் படையினரால் நேற்று செஞ்சிலுவை சர்வதேசக் குழு ஊடாக விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

மோதல் சம்பவத்தைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு 7.30 மணி

(14ஆம் பக்கம் பார்க்க)

### சிங்களவர்கள் மீதான தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து

## இன்று சிஹல உறுமயவின் ஏற்பாட்டில் கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி

### சிங்களவர்களின் கடைகளை மூடக் கோரி நகரில் சுவரொட்டிகள்

கொழும்பு,மே10

மாவனல்ல வன்முறைக் கலவரங்களில் சிங்களவர்கள் தாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் -

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிங்களவர்களுக்கு நஷ்டஈடு வழங்கக் கோரியும் -

சிங்கள மக்களின் உரிமைகளை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும் என்று கோரியும் -

சிஹல உறுமய கட்சி இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளது.

பேரணியின் இறுதியில் - பிற்பகல் 1.00 மணியளவில் - கொழும்பு திம்பிரிக்கசாய விகாரையில் எதிர்ப்புக் கூட்டம் ஒன்றும் நடத்தப்படவுள்ளது.

சிஹல உறுமயவின் இந்த ஊர்வல ஏற்பாடுகளை அடுத்து நேற்று தலைநகரில் வாழும் முஸ்லிம்கள் மத்தியில் அச்சமும் பதற்றமும் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இன்றைய ஆர்ப்பாட்டப் பேரணி மற்றும் எதிர்ப்புக் கூட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பிலுள்ள சிங்களவர்களுக்குச் சொந்தமான கடைகள் எவற்றையும் திறக்கக் கூடாது எனவும் -

சிங்களச் சாரதிகள் தமது வாகனங்களை இன்று முழுநாளும் வீதிகளில் இறக்கக் கூடாது என்றும் -

தெரிவிக்கும் சுவரொட்டிகள் நேற்று மாலை கொழும்பு நகரில் பரவலாக ஒட்டப்பட்டிருந்தன.

(14ஆம் பக்கம் பார்க்க)

### அரசாங்கத்துக்கு எதிரான

## நம்பிக்கை இல்லாப் பிரேரணைக்கு ஆதரவாக ரெலோ வாக்களிக்கும்

### முதல்வர் ஸ்ரீகாந்தா தெரிவிப்பு

கொழும்பு,மே10

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக நாடாளுமன்றில் ஐ.தே.கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்தால் ரெலோ நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு ஆதரவாக வாக்களிப்பார்கள்.

ரெலோ அமைப்பின் முதல்வர் என்.ஸ்ரீகாந்தா உதயனுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கென அதன் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதற்கு ஐ.தே.கட்சி நடவடிக்கைகளை மேற்கொணடு வருகின்றது. விரைவில் அவர்கள் அப்பிரேரணையை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பார்கள்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றில் வாக்கெடுப்புக்கு விடப்படும் போது அதற்கு ஆதரவாக ரெலோ அமைப்பின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாக்களிப்பார்கள் - என்று அவர் மேலும் சொன்னார். (ம)

### எதிர்த்து வாக்களிக்க ஐ.தே.கட்சி முடிவு

கொழும்பு,மே10

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதம் இன்று நாடாளுமன்றத்தில் இடம்பெறவிருக்கின்றது.

இன்று இப்பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படும்போது அதற்கு எதிராக வாக்களிப்பது என்று ஐ.தே. கட்சியின் நாடாளுமன்றக் குழு நேற்றுக் கூடி முடிவுசெய்தது. (உ)

## சிஹல உறுமயவின் அலுவலகம் பொலீஸாரால் திடீர் சோதனை

கொழும்பு,மே10

சிஹல உறுமய கட்சியின் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகம் மற்றும் பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய இயக்கத்தின் கொழும்பு அலுவலகம் என்பன நேற்று குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலீஸாரால் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டன.

கட்சி அலுவலகங்களுக்குள் திடீரெனப் புகுந்த குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் அலுவலகம் முழுவதையும் தீவிர சோதனைக்கு உட்படுத்தினர். அங்கிருந்த ஆவணங்களையும் அவர்கள் தீவிர சோதனை செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. சோதனை இடம்பெற்ற சமயம் அலுவலகங்களில் இருந்தவர்களும் விசாரிக்கப்பட்டனர்.

சிஹல உறுமய கட்சியின் ஏற்பாட்டில் கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டப்பேரணி நடத்தப்பட உள்ளதை அடுத்தே நேற்று இந்த திடீர்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## ஏற்கனவே இராணுவத் தரப்பு அனுமதித்தும்
# வள்ளங்களில் பாயுடன் செல்ல குருநகர் படையினர் அனுமதி மறுப்பு
## மீனவர்கள் பெரிதும் ஏமாற்றம்

யாழ்ப்பாணம்,மே10

யாழ்.குடாக்கடலில் வள்ளங்களில பாய்களைப் பயன்படுத்துவதற்கு இராணுவத்தரப்பினர் அனுமதி வழங்கியுள்ள போதிலும், குருநகர் இறங்குதுறையில் முகாமிட்டுள்ள கடற்படையினர் கடற்றொழிலாளர்களைப் பாய்களுடன் கடலுக்குள் செல்ல அனுமதிக்கவில்லை என்று கவலை தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் வடக்கின அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து இந்த அனுமதியைப் பெற்றுத்தருமாறு கோரி இருந்தனர். அதை அடுத்து அமைச்சர் இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இந்த அனுமதியைப் பெற்றுக் கொடுத்திருந்தார்.

பாய்களைப் பயன்படுத்துவதற்கு இராணுவ உயர்பீடம் அனுமதி வழங்கியதை குருநகர் இறங்குதுறையில் உள்ள கடற்படையினரிடம் அப்பகுதி மீனவர்கள் எடுத்துக்கூறிய போதிலும் அவர்கள் அதனை ஏற்க மறுத்து விட்டனர் என்றும் -

இராணுவ உயர் மட்டத்தில் இருந்து இது தொடர்பான அறிவிப்பு எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என கடற்படையினர் தம்மிடம் கூறித் திருப்பி அனுப்பிவிட்டனர் என்றும் மீனவர்கள் கவலை தெரிவித்தனர்.

இதேவேளை இலங்கை கடற்பரப்புக்குட்பட்ட தீவுப்பகுதி கடலில் குடாநாட்டு மீனவர்கள் எவரும் மீன் பிடிக்க அனுமதிக்கப்படாத அதே நேரம் இக்கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் ஏராளமாக வந்து மீன் பிடிப்பதாகவும் இதனைக் கடற்படையினர் கண்டும் காணாமல் விட்டுவிடுகின்றனர் எனவும் மனவாகள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-4)


## கண்ணீர்ப் பூக்கள்



### அமரர் J.D.மத்தாயஸ்

எமது துறைத் தலைவர் அருள் தந்தை அன்ரன் மத்தாயஸ அவர்களின் அன்புத் தந்தையாரின் மறைவால் துயருறும் அருள் தந்தைக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் அவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக எம் செபங்களையும் காணிக்கையாக்குகின்றோம்.

2ஆம் வருட மாணவர்கள்,
கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரீகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

(C/16653)

## தேவை

பத்திரிகை மடிப்பதற்கு ஆள்கள் தேவை.
அலுவலக நேரத்தில் நேரில் தொடர்புகொள்ளவும்.

முகாமையாளர்,
'உதயன்' பத்திரிகை நிறுவனம்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/16651)

## அமைதிப் பேரணி

சாவகச்சேரியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துமாறு கோரி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் ஊர்வலமாகச் சென்று மகஜர் கையளிப்பதற்கு, இடம்பெயர்ந்த மக்கள் இருபாலாரையும் நாளை (11-05-2001) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். பஸ்நிலையத்தில் ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

-ஒழுங்கமைப்பாளர்.

(87628)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன ஆசிரியர்
**திரு.தர்மகுலசிங்கம்**
அவர்களின் அன்புத் துணைவியார்
**திருமதி தர்மகுலசிங்கம் தேவராணி**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஆளணியினர்.

(C/16647)


### சிறுவன் காயம்

யாழ்ப்பாணம்,மே10

சுற்றுமதில் மீது ஏறமுற்பட்ட சமயம் அது இடிந்து விழுந்ததால் படுகாயமடைந்த சிறுவன் யாழ்.போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

சென்ஜேம்ஸ் ரோட், 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வில்லியம் செறின்ரன் (வயது-15) என்ற சிறுவனே இடது காலில் படுகாயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (ம-6)

### கத்தி வெட்டுக்கு இலக்கான மாணவன்

யாழ்ப்பாணம்,மே10

நீர்வேலிப் பகுதியில் இனந்தெரியாத நபர்களின் கத்தி வெட்டுக்கு இலக்கான பாடசாலை மாணவன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்தியார் இந்துக் கல்லூரியில் தரம் -11 கற்கும் மாணவனான திருநாவுக்கரசு லிங்கேஸ்வரன் (வயது -16) என்ற மாணவனே நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் வீதியில் வைத்து கத்தி வெட்டுக்கு இலக்கானவராவார். (ம-6)

### கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,மே10

யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியின் கல்வியியல் கண்காட்சி எதிர்வரும் 17ஆம் 18ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

கற்றல், கற்பித்தலுடன் தொடர்புடைய - தற்காலச் செல்நெறியை ஒட்டிய - பல்வேறு அம்சங்கள் இந்தக் கண்காட்சியில் இடம்பெறவிருக்கின்றன.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி ஆர்வலர்கள் கண்காட்சியைப் பார்வையிட்டுப் பயன்பெற முடியும் என்று கண்காட்சி ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கண்காட்சியைப் பார்வையிட வரும் பாடசாலைகள் முன்கூட்டியே தொடர்புகொண்டு அதற்கான கால ஒழுங்குகளைப் பதிவு செய்து கொள்ளுமாறும் ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (ஐ)

### கைதானவர் விடுவிக்கப்படவில்லை

யாழ்ப்பாணம்,மே10

வரணிப் பகுதியில் கடந்த மாதம் 29ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்ட குடும்பஸ்தர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி தெரிவித்தார்.

வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த வல்லிபுரம் இலங்கேஸ்வரன் (வயது -33) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

இவருடன் சேர்த்து இவரது மனைவியும் கைதானதாக மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் முன்னர் தெரிவித்திருந்தது. அந்தத் தகவல் தவறானது என்று ஆணைக்குழு அதிகாரி தற்போது தெரிவித்துள்ளார். (ஐ-10)


## இந்து நாகரிகம்

### A/L. 2003

புதிதாக இணைந்த மாணவர்களுக்கும் புதிதாக இணையவுள்ள மாணவர்களுக்கும் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.

*ஆரம்பம்:*
நாளை 11-05-2001 வெள்ளி 3.15 p.m.

**திரு. N.T.தரன்**

2002, 2001 இற்கான வகுப்புகளும் நடைபெறுகின்றன. (87613)

**யாழ்.கல்வி நிலையம்**
பாலிப்பாய் வீதி, ஆறுகால்மடம்.

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
### பரிசுத் தினம் - 2001

*காலம்* : 12-05-2001 சனிக்கிழமை முற்பகல் 9.45 மணி
*இடம்* : குமாரசுவாமி மண்டபம்

பிரதமவிருந்தினர்:
**உயர்திரு. சி.தில்லைநடராஜா**
(மேலதிக செயலாளர் - கல்வி, உயர்கல்வி அமைச்சு)

பரிசில் வழங்கல்:
**திருமதி தேவமலர் தில்லைநடராஜா**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(C/16644)


## பின்னுறுதித் தீர்வை பற்றிய அறிவித்தல்
### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

மண நீக்கம்/93

இராஜநாதன் சிவகுமாரன்,
ஊரெழு வடக்கு, சுன்னாகம்.
-வழக்காளி-

எதிராக

சிவகுமாரன் பெண் சத்தியதேவி,
கொட்டைக்காடு, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
-எதிராளி -

மேற்குறித்த இலக்க வழக்கு யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு. ஆர். ரி. விக்னராஜா அவர்கள் முன்பாக 2000ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 18ஆம் திகதியன்று வழக்காளியும் வழக்காளியின் சட்டத்தரணிகள் திருவாளர்கள் கனகரத்தினம் அசோசியேட்ஸ் நிறுவனத்தினர் பிரசன்னமாயிருக்க முடிவெய்ய வந்தபோது மேற்குறித்த எதிராளிக்கு வழக்கில் அழைப்புக் கட்டளை இம்மன்றின் பிஸ்கால் சேவகரால் வழங்கப்பட்டு அவர் இவ்வழக்கில் தோன்றி மறுமொழி அணைக்கத் தவறியமையால் வழக்கு எதிர்ப்பில்லா விளக்கத்துக்கு எடுக்கப்பட்டு மேற்குறித்த எதிராளி வழக்காளியை வேண்டுமென்று துறந்தார் என்ற குற்றத்தைப் புரிந்துள்ளார் என மன்று கருதியதால் பின்வருமாறு மன்று கட்டளையிட்டுத் தீர்வையளித்துள்ளது.

இப்பின்னுறுதித் தீர்வை எதிராளிக்குச் சேர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து அதனடுத்த (3) மூன்று மாதகாலத்துக்குள் மேற்குறித்த எதிராளி இப்பின்னுறுதித் தீர்வையை இம்மன்றின் முழுவிதிப்பாக ஏன் எழுதக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்கள் காட்டினாலன்றி மேற்குறித்த எதிராளி வழக்காளியை வேண்டுமென்று துறந்தார் என்ற காரணத்திற்காக மேற்குறித்த வழக்காளிக்கும் எதிராளிக்கும் 1993ஆம் ஆண்டு மார்கழி மாதம் 30ஆம் திகதி நடைபெற்ற விவாகப்பதிவை ரத்துச் செய்து ஒரு மணநீக்கத் தீர்வையை இம்மன்று விதிக்கின்றது என இம்மன்று கட்டளையிட்டு தீர்வையளித்துள்ளது.

இப்பின்னுறுதித் தீர்வை இம்மன்றின் முழு விதிப்பானவுடன் இவ்வழக்கின் எதிராளி தனது கன்னிப் பெயரான சீனித்தம்பி மகள் சத்தியதேவி என்ற பெயரை மீளப் பெற்று மணமாகாத பெண்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் அனுபவித்து வரலாம் என இம்மன்று கட்டளையிட்டுத் தீர்வையளித்துள்ளது.

மன்றின் கட்டளைப்படி

*வரைந்தது:-*
கனகரத்தினம் அசோசியேட்ஸ்
*வழக்காளியின் சட்டத்தரணி.*

து.சிறிமோகன்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

(87625)


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.கிளை
### பொதுக் கூட்டம் - 27.05.2001

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 27.05.2001 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.கிளைத் தலைமையகத்தில் உள்ள "கென்றி டுனாற்" மண்டபத்தில் தலைவர் வைத்தியகலாநிதி வை.தியாராஜா அவர்களின் தலைமையில் நடைபெறும். பிரிவுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 10 பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

நிகழ்ச்சி நிரல், அறிக்கைகள் அவ்வப்பிரிவுகள் மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

கௌரவ செயலாளர்,
இல.செஞ்.சங்கம்.

(C/16648)


## மரண அறிவித்தல்
### கதிரவேல் அம்பலவாணர் (பேபி)

அற்கின்சன் வீதி, வட்டு. தென்மேற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட கதிரவேல் அம்பலவாணர் (பேபி) (04 -05-2001) கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேல் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்), இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் சரஸ்வதிதேவியின் அன்புக் கணவரும், கதிரவேல் (E.S.P.& Co. யாழ்), செல்வராணி பிரேமராணி, கேமராணி (யாழ்.வட்டு. மத்திய கல்லூரி மாணவி), ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகேஸ்வரி, காலஞ்சென்ற புவனேஸ்வரி, சிவசிதம்பரநாதன் (மலேசியா), மகேஸ்வரி, சண்முகசுந்தரம், ஆகியோரின் அன்புச் சகோதரரும், கந்தசாமி, காலஞ்சென்ற பஞ்சாட்சரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-05-2001) வியாழக்கிழமை பி.பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்துத்துறை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
அ.கதிரவேல
(மகன்)

*வட்டு. தென்மேற்கு,*
*வட்டுக்கோட்டை.*

(87626)

# இரு தரப்பும் யுத்தத்தை நிறுத்தி உடன் பேச்சை ஆரம்பிக்க வேண்டும்

## ஆனந்தசங்கரி எம். பி. வலியுறுத்துகிறார்

வவுனியா, மே 10

எமது மக்களுக்கு இப்போது யுத்தநிறுத்தமும், சமாதானமுமே அவசியம் தேவை. யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சுக்களில் இரு தரப்பினரும் ஈடுபட வேண்டும்.

—இவ்வாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவருமான வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

வவுனியா கூட்டணி அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் உரையாற்றினார்.

தமிழ் மக்களின் உரிமைகளை ஆட்சிக்கு வந்த அரசுகள் வழங்காததாலேயே இந்த யுத்தம் நடைபெறுகிறது. ஆனால் இப்போது அரசுக்கு மேற்குலக நாடுகளிலிருந்து புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு அறிவுறுத்தல்கள் வந்துள்ளது.

இந்தியா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகள் வற்புறுத்தி வருகின்றன. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வுகாண முடியாது என்பதை அந்த நாடுகள் இலங்கை அரசுக்குத் தெளிவுபடக் கூறியுள்ளன. நெருக்குதலையும் கொடுத்துள்ளன. தொடரும் இந்தக் கொடிய யுத்தத்தில் வெற்றி கொள்ள முடியாது.

ஆயுதப் போராட்டம் நடத்திய நாம் ஜனநாயக வழிக்கு வந்துவிட்டோம் என்று கூறும் சில தமிழ் குழுக்கள் முதலில் தமது அடாவடித்தனங்களை நிறுத்த வேண்டும்.

குறிப்பாக வர்த்தகரிடம் கப்பம் வாங்குவது, வரி அறவிடுவது, ஆள்களைக் கடத்துவது போன்ற செயல்களை நிறுத்தி மக்களுக்கு நன்மை செய்யும் காரியங்களில் ஈடுபட வேண்டும்.

அவ்வாறாக அவர்கள் செயற்பட்டால் அவர்களுடன் நாம் இணைந்து செயற்படுவது பற்றிச் சிந்திப்போம்.

தமிழ்க் கட்சிகள் பலமாக இருக்க வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் தவறு விடுபவர்களுடன் நாம் இணைந்து கொள்ளமுடியாது.

யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழ்க் குழு கடற்றொழில் செய்யும் மக்களுடைய வயிற்றில் அடித்துள்ளது. அவர்கள் கடல் அட்டை பிடித்துச் சம்பாதிக்கின்றனர். வேறு எவருக்குமே அங்கு கடல் அட்டை பிடிக்கமுடியாத நிலை உள்ளது. அந்தக் கடல் இக் குழுவினருக்கே சொந்தமாகவுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் விட்ட தவறின் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்பதை மக்களும் உணர்ந்துவிட்டனர். அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்ற ஒரு விடயத்தில் மட்டும் நாம் தமிழ்க் கட்சிகளுடன் சேருகின்றோம்—என்றார்.

வவுனியாவில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் கைதுகள், காணாமற்போதல் மற்றும் இங்குள்ள பிரச்சினைகள் குறித்து ஆராயவும், கூட்டணித் தொண்டர்கள், ஆதரவாளர்களைச் சந்திக்கவும் ஆனந்தசங்கரியும், யாழ். மாநகர மேயர் என். ரவிராஜும் வவுனியாவுக்கு வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (க)

# 'றாக்கை'கள் அப்புறப்படுத்தியது சரியானதொரு 'நடவடிக்கையே!

## மாநகர சபை உயர் அதிகாரி கூறுகிறார்

யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாணம் நவீன சந்தையின் உட்பகுதியில் கடைகளின் முன்பாகப் போடப்பட்டிருந்த 'றாக்கை'கள் மற்றும் பலகைத் தட்டுகள் யாவும் மாநகரசபை அதிகாரிகளால் அகற்றப்பட்ட சம்பவமானது மிகவும் சரியானதொரு நடவடிக்கையே என்று மாநகர சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மக்களின் நடமாட்டங்களுக்குத் தடையாகவும், இடைஞ்சலாகவும் இருந்த இவற்றை அகற்றுமாறு பல தடவைகள் மாநகர சபை நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அங்குள்ள விளம்பரப் பலகையிலும் இது தொடர்பான அறிவித்தல் ஒட்டப்பட்டிருந்தது.

ஆனால் கடை உரிமையாளர்களால் அவை அகற்றப்படவில்லை. இதனையடுத்துத் தனித்தனியான கடிதங்கள் அவர்கள் அனைவருக்கும் அதிகாரிகளால் வழங்கப்பட்டன.

அவ்வாறு வழங்கப்பட்டும் இதுவரையும் அவர்கள் எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளாததை அடுத்தே, கடந்த திங்கட்கிழமை மாநகர சபையினால் மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக மாநகர சபைக் கூட்டத்திலும் முன்பு தீர்மானிக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (க-10)


# வாழ்த்துக்கள்

சைவக் குழந்தைகளைச் சைவசமய மரபுகளுக்கமைய வழிநடத்தி வளர்க்கும்

'தாயகம்' அமைப்பாளர்

திரு. எஸ்,வி. சிறிதரன் அவர்களை

பல்லாண்டு காலம் நீடூழி வாழ்ந்து, சமயப்பணிபுரிய அருள்செய்ய எல்லாம்வல்ல கற்பகவிநாயகர் பாதாரவிந்தங்களைப் பணிந்து வேண்டுகின்றோம்.

வண்ணை - சாந்தையர்மடம்
ஸ்ரீ கற்பகவிநாயகர் கோயில்
சைவசமய அபிவிருத்திக் கழகத்தினர்.

(87624)



# சாவ/ கைத்தொழில் வணிகர் மன்ற ஒன்றுகூடல்

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் அங்கத்தவர்களின் வணிக நிலைய இழப்பீட்டினைப் பெறுவது சம்பந்தமான மகஜர் கௌரவ அமைச்சர்

மாண்புமிகு கே. என். டக்ளஸ் தேவானந்தா

அவர்களிடம் கையளிக்க வேண்டியுள்ளதால், சகல அங்கத்தவர்களும் மகஜரில் கையொப்பமிடுவதற்காக நாளை [11—05—2001] வெள்ளிக்கிழமை காலை 9. 00 மணிக்கு யாழ். பஸ் நிலையத்தில் ஒன்றுகூடுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

ந. சிவபாலன்
செயலாளர்
சாவ/கைத்தொழில் வணிகர் மன்றம்.

[சி/16342]



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரான

உயர் திரு.

கணபதிப்பிள்ளை பரமேஸ்வரன்

அவர்கள் 01—06—1992 தொடக்கம் இலங்கையின் அதிபர் சேவை தரம் 2—1 க்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துத் தெரிவிப்பதுடன் அவரது சேவை மென்மேலும் சிறப்புற வேண்டும் என்று மனதார வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/ பூம்புகார் அ. த. க. பாடசாலை,
யா/ அரியாலை கிழக்கு அ. த. க பாடசாலை,
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்.

(87619)


# காணாமற்போனோர் விசாரணை: யாழ். பொலீஸ் நிலையத்திற்கு உறவினர்கள் அழைப்பு

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் 10 பேர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக அவர்களின் உறவினர்களை யாழ். பொலீஸ் நிலையத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர். விசாரணைக்கு விடுக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரமும் வருமாறு:-

★ சவரிமுத்து அன்ரன் ஜெயக்குமார் (காணாமற்போனவர்) இல 136, ஆத்திகுடி வீதி, கந்தர்மடம் மேற்கு. அழைக்கப்பட்டுள்ளவர்கள்:- அருளம்பலம் (அருளம்பலம் வீதி, அரியாலை), மாலினி அன்ரன் ஜெயக்குமார் (காணாமற்போனவரின் மனைவி).

★ குணபாலசிங்கம் பாலேந்திரன் (காணாமற்போனவர்) இல. 37, புங்கன்குளம் வீதி, அரியாலை. அழைக்கப்பட்டுள்ளவர்:- நவரட்ணம் புண்ணியமூர்த்தி (அரியாலை).

★ கந்தையா அருள்தரன் (காணாமற்போனவர்) இல. 27/15, வைரவர் கோயில் வீதி, அரியாலை மேற்கு. அழைக்கப்பட்டுள்ளவர்கள்:- சத்தியகுமார் (இல. 21, கலைமகள் வீதி, அரியாலை மேற்கு) ராசகுலம் தேவஸ்ரீ அம்பிகா (இல. 33, ஆசிர்வாதப்பர் வீதி, நல்லூர் கிழக்கு).

★ நவரட்ணம் கதிர்காமவேல் (காணாமற்போனவர்) இல. 456, நாவலர் வீதி, யாழ்ப்பாணம், அழைக்கப்பட்டவர்:- சுப்பிரமணியம் ராசமணி (மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்)

★ பரராஜசிங்கம் சுஜேந்திரன் (காணாமற்போனவர்) 21/5, வைமன் றோட், முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். அழைக்கப் பட்டவர்:- திருமதி தேவராணி (தாதி, யாழ் மாநகர சபை)

★ துரைராசா பாலச்சந்திரன் (காணாமற்போனவர்) செம்மணி வீதி, அரியாலை. அழைக்கப்பட்டவர்:- துரைராசா ஜெயராசா (பண்டாரிக்குளம், நல்லூர்)

★ பண்டாரி ராஜசிங்கம் (காணாமற்போனவர்) இல. 227, கலைமகள் வீதி, நல்லூர். அழைக்கப்பட்டவர்:- பாலசுந்தரி (தனங்களப்பு)

★ தெய்வேந்திரம் பிரபாகரன் (காணாமற்போனவர்) இல. 619 கோப்பாய் வடக்கு, கோப்பாய் அழைக்கப்பட்டவர்கள்!- சின்னத்தம்பி தெய்வேந்திரன், சுயமணி (619, கோப்பாய் வடக்கு)

★ சிவபாக்கியம் சிவமோகன் (காணாமற்போனவர்) 198, ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை. அழைக்கப்பட்டவர்:- தம்பு சிவபாக்கியம்.

★ டேவிற் டொனால்ட் (காணாமற்போனவர்) 70/5, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, அழைக்கப்பட்டவர்:- திரேசம்மா (பாண்டியன்தாழ்வு)

(க 6-4)

# விளையாட்டு நிகழ்வுகள்

இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ் பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்திய வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம், 3 ஆம் இடத்துக்கான ஆட்டம் என்பன இன்று மாலை 4.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடைபெறவுள்ளது.

இறுதி ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக வி. க அணியை எதிர்த்து யூனியன் வி. க அணி மோதும்.

இன்று பிற்பகல் 3.00 மணிக்கு 3 ஆம் இடத்துக்கான ஆட்டம் நடைபெறும். இதில் ஜொலிஸ்ரார்ஸ் வி. க அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் வி. க அணி மோதும்.

★ ★ ★

யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் கொக்குவில் ஸ்ரீ வராகி விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

நவாலி தென்றல் வி. க அணி எதிர் உடுவில் இந்து வி. க அணி (ப-36)

★ ★ ★

நல்லூர் பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களிடையே நடத்தப்பட்டு வரும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கோண்டாவில் ஸ்ரீ நாராயண சனசமூக நிலைய விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

திருநெல்வேலி மகாத்மாஜி சனசமூக நிலைய வி. க அணி எதிர் கோண்டாவில் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலைய வி. க அணி. (ப-36)

★ ★ ★

யாழ். மாவட்டப் பாடசாலைகள் இடையே நடத்தப்பட்டுவரும் வலைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மூன்றாம் இடத்துக்கான ஆட்டங்கள் இன்று பிற்பகல் 2 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெறும்.

இன்றைய ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ 15 வயதுப் பிரிவு — சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அணி எதிர் மெதடிஸ்த மகளிர் கல்லூரி அணி

★ 17 வயதுப் பிரிவு — கனகரட்ணம் ம. வி. அணி எதிர் வட இந்து மகளிர் கல்லூரி அணி

★ 19 வயதுப் பிரிவு — வேம்படி மகளிர் கல்லூரி அணி எதிர் மெதடிஸ்த கல்லூரி அணி. (ம)

# போத்தல் விளக்கு வெடித்து தாயும் மகனும் காயம்

போத்தல் விளக்குக்கு மண்ணெண்ணெய் விடும்போது அது வெடித்ததில் தாயும், மகனும் எரிகாயங்களுக்கு இலக்கான சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு சரவெட்டி கோவில் சந்தை என்னும் இடத்தில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த தம்பிராசா ஞானேஸ்வரி (வயது 35), அவரது மகனான தம்பிராசா அருள் கோபி (வயது 12) ஆகியோரே எரிகாயங்களுக்கு இலக்காகி மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-117)


# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி கோணேஸ்வரி மதிவர்ணன்
அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி குமாரசுவாமி சரஸ்வதி

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக.

—ஆசிரியர் கழகம்,
யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி.

(87613)

# அடிப்படை வசதிகள் ஏதுமின்றி செயற்படும் யாழ். நீதிமன்றம்

## மக்கள் மர நிழலில் காத்து நிற்கும் அவலம்

யாழ்ப்பாணம், மே 10

யாழ். மாவட்ட நீதிமன்றம் மற்றும் நீதிவான் நீதிமன்றம் இயங்கும் கட்டடத்தில் போதிய இடவசதிகள் மற்றும் தளபாட வசதிகள் மலசலகூட வசதிகள் இன்றி பொதுமக்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.

நான்காம் குறுக்குத் தெருவில் இயங்கும் மேற்படி நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் செய்யும் மண்டபத்தில் அமர்வதற்கு போதிய தளபாட வசதிகள் இல்லை. 20 அடிக்கும் குறைவான விஸ்தீரணமுள்ள மண்டபத்தில் நிற்க முடியாத பொதுமக்கள் மர நிழலிலேயே கால் கடுக்கக் காத்திருக்கிறார்கள்.

விசாரணைக்கு வழக்கு இலக்கம் அழைக்கப்படும் சந்தர்ப்பங்களில் வெளியில் நிற்பவர்கள் ஏனையவர்களை விலக்கிக் கொண்டு சிரமத்துடன் உட்பிரவேசிக்க வேண்டியுள்ளது.

விசாரணைகளுக்காக நீதிமன்றம் வரும் பொதுமக்கள் இயற்கை உபாதைகளைக் கழிப்பதற்குக் கூட வசதிகள் இல்லை. அதனால் அவர்கள் ஒதுக்குப் புறமான இடங்களை நாடிச் செல்கின்றார்கள். நீதிமன்றில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் இதே அவல நிலைமை தான்.

யாழ் மாவட்டத்தில் அதிகமான வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படும் இந்த நீதிமன்றில் பொதுமக்கள் சிரமப்படுவதைக் கருத்தில் எடுத்து அடிப்படை தேவைகளையாவது உரியவர்கள் பூர்த்தி செய்து தரக்கூடாதா என்று கேள்வி எழுப்பப்படுகிறது. (க-6)

## தொண்டர் ஆசிரியர் நேர்முகப் பரீட்சை

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுவோருக்கான நேர்முகப்பரீட்சை இன்றும் நாளை வெள்ளிக்கிழமையும் காலை 9 மணிக்கு யாழ் வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

(க-10)

## அனுமதி அட்டைகளை இன்று நேரில் பெறலாம்

யாழ்ப்பாணத்தில் வேம்படி மகளிர் கல்லூரியில் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ள கணக்காளர் பரீட்சையின் தோற்றவுள்ளோர் தமது அனுமதி அட்டைகளை— இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் பின்பு யாழ். வலயக் கல்விப் பணிமனையில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்த அனுமதி அட்டைகள் இன்று கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட உள்ளதால் அவற்றை உரியவர்களின் முகவரிக்கு அனுப்ப முடியாதுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க-10)

## கோட்டையில் அன்னையர் சத்தியாக்கிரகப் போராட்டம்

### 2 ஆயிரம் பேர் வரை பங்கேற்பர்

கொழும்பு, மே 10

வடக்கு — கிழக்கு யுத்தத்தின்போது காணாமற் போன படை வீரர்களது உறவினர்கள் சங்கம், அன்னையர் தினத்தையொட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி ரயில் நிலையத்திற்கு முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்த உள்ளது.

இந்தப் போராட்டத்தில் நாடெங்கும் இருந்து இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தாய்மார்கள் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுவதாக சங்கத்தின் தலைவர் ஈ.பி. நாணயக்கார தெரிவித்தார்.

யுத்தத்தை நிறுத்தி, இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நடைபெறவுள்ளது.

சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொள்ள மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, அம்பாறை உட்பட நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் தாய்மார்கள் வருகை தரவிருப்பதாகவும் அவர் கூறினார்.

தொடரும் யுத்தம் காரணமாக தேசிய சொத்துகளும், மனித வளங்களுமே அழிவுற்று வருகின்றன. இதனால் நாட்டுக்கு எந்த இலாபமுமே இல்லை. அதனால் இனப் பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணும்படி சத்தியாக்கிரகத்தின்போது தாய்மார்கள் வலியுறுத்துவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (க)

## சாவற்கட்டு வீட்டுத் திட்டத்தில் மலசலகூடம் இல்லாத நிலையில் 36 குடும்பங்கள் குடியமர்வு

### தொற்றுநோய் பரவும் ஆபத்து

வலி. தென்மேற்கு, மே 10

சாவற்கட்டு 100 வீட்டுத் திட்டத்தின் கீழ் தற்போது 36 குடும்பங்கள் குடியமர்ந்துள்ள போதிலும் அங்கு மலசலகூட வசதி செய்து தரப்படவில்லை என்று ஆனைக்கோட்டை பொதுச் சுகாதார பரிசோதகர் வை. தயாமோகன் பிரதேச சபைத் தலைவரிடம் முறையிட்டுள்ளார்.

தற்போது குடியேறியுள்ளோர் குடியேறாத மற்றைய குடிமனைகளுக்குள் மலம் கழித்து வருவதாகவும் —

இதனால் தொற்று நோய்கள் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர் உடன் மலசலகூடம் அமைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

(க-185)

## தென்மராட்சியில் சேதமடைந்த விவாகப் பதிவுச் சான்றிதழ்களை சீர்செய்வதற்கு நடவடிக்கை

### 10 பேரை தொடர்புகொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 10

தென்மராட்சியில் இருந்து மிகவும் சேதமடைந்த நிலையில் இருந்த ஒரு தொகுதி விவாகப் பதிவுச் சான்றிதழ்கள் மீட்கப்பட்டுள்ளன என்று அந்தப் பிரதேசப் பதிவாளர் எஸ். மோகனராஜலிங்கம் தெரிவித்துள்ளார்.

மீட்கப்பட்ட சான்றிதழ்களில் ஒரு தொகுதி சீராக்கப்பட்டுள்ளதாகவும் —

சீராக்கமுடியாத நிலையில் உள்ள பத்துப்பேரின் பதிவுகளை மீளப் பதியவேண்டியுள்ளதால் அவர்களிடம் உள்ள சான்றிதழ்களுடன் தம்மைச் சந்திக்கும் படியும்— அவர் கேட்டுள்ளார்.

அழைக்கப்பட்டுள்ள பத்துப் பேரின் விவரம் வருமாறு:-

செல்லையா கமலநாதன் (நுணாவில் மத்தி), சின்னத்தம்பி நகுலேஸ்வரன் (மட்டுவில் தெற்கு), தர்மலிங்கம் நாகன் நந்தன் (சாவகச்சேரி), சாபரத்தினம் இராகவன் (சரசாலை தெற்கு), சிமியோன் அன்ரன் ராஜ்குமார் (சாவகச்சேரி).

பூபாலசிங்கம் சுந்தர் (மட்டுவில் வடக்கு) சின்னத்தம்பி செந்தில்குமார், கடேசு கந்தசாமி (நீர்வேலி], நடராசா கமலேஸ்வரம் [மீசாலை]. இரத்தினம் விநாயகேஸ்வரன்.

[க-3]

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மே 10

யாழ் வண்ணை ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையத்தினரால் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு விழா இன்று வியாழன் மாலை 4 மணியளவில் நிலைய முன்றிலில் நடைபெறும்.

சிறப்பு நிகழ்ச்சியாக யாழ். முன்னணி இசைக் கலைஞர்கள் பங்கு பற்றும் சாஸ்திரிய மெல்லிசை நிகழ்ச்சியும் இடம்பெறும். (க)

## தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் 11கிராம அலுவலர் பதவிகளுக்கு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள்

தென்மராட்சி, மே 10

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் வெற்றிடமாக உள்ள பதினொரு கிராம அலுவலர் பதவிகளும் அங்கு கடமையாற்றும் முதலாம்தர சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் மூலம் நிரப்பப்படவுள்ளன.

தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர்ப்பட்டியல் பொது நிர்வாக அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பியின் தென்மராட்சி அமைப்பாளர் சு அலெக்சாண்டர் (சாள்ஸ்) தெரிவித்தார்.

(க-117)

## வடமராட்சி கிழக்கின் வளங்களை அங்குள்ள மக்களே பேண வேண்டும்

### குடத்தனை வைபவத்தில் யாழ். அரச அதிபர்

வடமராட்சி கிழக்கு, மே 10

"வடமராட்சி கிழக்கின் வளங்களை அங்கு வாழும் மக்களே பேணிப் பாதுகாக்க வேண்டும்."

— இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்தார்.

வல்வெட்டித் துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபையால் மக்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கும் வைபவம் அண்மையில் குடத்தனையில் நடைபெற்றது. பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு கூறினார்.

இவ் வைபவம் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபைத் தலைவர் டாக்டர் க. மயிலேறும் பெருமான் தலைமையில் நடைபெற்றது.

அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:-

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தை எவரும் மறக்கவில்லை. யாழ். மாவட்டத்தில் இன்று வடமராட்சி கிழக்கு மண்ணைப் பற்றித்தான் பேசப்படுகின்றது பசுமைப் புரட்சி என்ற பெயரில் வடமராட்சி கிழக்கில் சவுக்கு மரங்கள் மீள் நடுகை செய்யப்பட்டன. இன்று நான் வரும் போது சவுக்கு மரங்கள் வெட்டப்பட்டுக் கொண்டு செல்லப்படுவதைக் கண்டேன். வடமராட்சி கிழக்கில் காணப்படும் வளங்களை இங்குவாழும் மக்கள் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் நிதியில்லாத போதிலும், பருத்தித்துறை மருதங்கேணி வீதியில் ஒருபகுதியை திருத்தியமைக்க 1. 6 கோடி ரூபாவை ஒதுக்கிக் கொடுத்துள்ளேன். இதே போல் கப்பூது அந்தணன் திடல் வீதியும் திருத்தியமைக்கப்படவுள்ளது. ஆக்கபூர்வமான விடயங்களை அடையாளங் கண்டு அதனைச் செய்து வருகின்றேன்.

வடமராட்சி மீனவர்கள் அண்மையில் முன் வைத்த கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டுள்ளதாக ஜனாதிபதி கடிதம் எழுதியுள்ளார். களநிலைக்கேற்பத்தான் முடிவுகளை எடுப்பார்கள். இவ்விடயம் தொடர்பாக இராணுவ உயர் அதிகாரி ஒருவருடனும் பேசியுள்ளேன். எல்லா விடயங்களையும் உணர்ச்சி பூர்வமாக அணுகித் தீர்க்க முடியாது.

பருத்தித்துறை துறைமுகத்தின் அபிவிருத்திக்கு ஒரு கோடி ரூபா செலவு செய்யப்பட்டது அதனால்தான் நாளொன்றுக்கு ஆயிரம் மெற்றிக் தொன் பொருள்களை விரைவாக இறக்கக் கூடியதாகவுள்ளது

எமது பாரம்பரிய பழக்க வழக்கங்கள் யாழ் மண்ணில் அழிந்து வருகின்றன எமது கலாசாரமும் பாரம்பரிய பழக்க வழக்கமும் பேணப்பட வேண்டும்— என்றார்.

இவ்வைபவத்தில் தென்னிந்தியத்திருச்சபை பேராயர் அதி வண எஸ் ஜெபநேசன், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பி வேலாயுபிள்ளை, கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன், மணற்காடு பங்குத் தந்தை அதி வண. ஜோர்ஜ் அடிகள் குடத்தனை தென்னிந்தியத் திருச்சபை வண பிதா எச். வசந்தகுமார், மருதங்கேணி திட்டமிடல் பணிப்பாளர் கே. ஈஸ்வரபாதம், கிராம அலுவலர்கள் வி. நடராசா, சோ. சிவலிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

இலவச மூக்குக் கண்ணாடிகளை யாழ். அரசாங்க அதிபர் வழங்கினார்.

(க, 182(


## கண்ணீர் அஞ்சலி

### திருமதி இராஜேஸ்வரி கணபதிப்பிள்ளை

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி இராகவன் நகுலேஸ்வரி
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி இராஜேஸ்வரி கணபதிப்பிள்ளை அவர்கள் இறைபத மெய்தியதையிட்டுத் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி,
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
(87606) அலுவலக ஊழியர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

வேலணைப் பிரதேச செயலக
சமுர்த்தி முகாமையாளர்

செல்வி நாகரத்தினம் நகுலராணி
அவர்களின் பாசமிகு தந்தையார்

### பெருமாள் நாகரத்தினம்

அவர்களின் திடீர் மறைவுச் செய்தியறிந்து மிகவும் துயரடைந்தோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிரதேச செயலகம்,
தீவுப்பகுதி தெற்கு,
வேலணை.

பிரதேச செயலரும்,
நலன்புரிக் கழக
உறுப்பினர்களும்.

[87610]

உதயன்

## கலவரத்தைத் தவிர்க்க....

தெற்கில் இனக்கலவரம் - சிங்கள முஸ்லிம் மக்களுக்கு இடையேயான மோதல் - ஒன்று வெடிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. பாதுகாப் புத்தரப்பு வெளியிடும் தகவல்களும் அத்தகைய அச்சத்தை வலுப்படுத்து கின்றன. மேற்சொன்ன இரண்டு இனங்களிடையேயும் கலவரம் ஏற்ப டலாம் என்ற சந்தேகத்தின் பேரில் அதனைத் தடுக்கும் வகையில் பொலிஸ், இராணுவ ரோந்து தீவிர மாக் கப்பட்டிருப்பதாக, பாதுகாப்பு அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள் ளனர்.

கொழும்பு, கம்பஹா, காலி ஆகிய மாவட்டங்களை கலவரம் மூளக் கூடிய மாவட்டங்களாகப் பாதுகாப்பு அதிகாரிகள் இனங்கண்டுள்ளார்கள் என்றால், நிலைமை சற்று மோச மாகி உள்ளதாகவே கொள்ள வேண்டி உள்ளது.

கலவரம் வெடிக்கும் என எதிர் பார்த்து அதனைத் தடுக்கவென பொலிஸ், இராணுவப் பிரிவுகளைத் தயார் நிலையில் வைத்திருப்பதாக வும் மேலும் தெரிவிக்கப்பட்டிருக் கிறது.

மாவனல்லவில் வெடித்த சிங் கள - முஸ்லிம் மோதல் விஸ்வரூபம் எடுக்காமல் தடுக்கப்பட்டிருப்பது வர வேற்கத்தக்கது. ஆனால் நிலைமை முற்றாகத் தணிந்து போகவில்லை; நீறு பூத்த நெருப்பாகவும் இல்லை; அனல் வீசிக்கொண்டே இருக்கிறது என்பதனை பலவகைத் தகவல் களும் உணர்த்துகின்றன.

மாவனல்ல மோதலை - முஸ் லிம் மக்கள், அவர்களின் வர்த்தக நிலையங்கள் மீதான தாக்குதல் களை - கண்டித்து கடந்த வாரம் கொழும்பில் கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்ய முனைந்தார் கள். அதனைப் பொலீஸார் தடுத்து அவர்களின் ஜனநாயக உரிமையை மறுத்தனர்.

உத்தேச கண்டன ஊர்வலம் கொழும்பில் பெரும் கலவரம் ஒன் றுக்கான மூலமாகவும் இருந்திருக் கலாம். மறுபுறத்தில் பொலீஸார் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தைத் தடுக் காமல் விட்டிருப்பின் அது குரோதத்தை உண்டாக்காமல் அப்படியே பொருட் படுத்துவார் இல்லாமற் போயிருக்க வும்கூடும்.

முஸ்லிம் மக்கள் தமக்கு எதி ராக இழைக்கப்பட்ட அநிதிக்கு எதிராக குரல் கொடுக்க முனைந் தது சிங்கள சமூகத்தைச் சேர்ந்த இனத்துவேசிகளுக்கு பெரும் ஆத் திரத்தை மூட்டியிருக்கிறது.

முஸ்லிம்களின் ஆர்ப்பாட்ட ஊர் வலத்தைக் காரணம் காட்டி, தென் னிலங்கையில் அவர்களுக்கு எதி ரான வன் செயல்களைத் தூண்டி விட இனத்துவேசிகள் தயாராகி வருவதாகச் சொல்லப்படுகிறது.

அவ்வாறே, கலவரம் அல்லது வன்செயல் வெடிக்குமானால் அதன் விளைவு பாரதூரமாகப் பெரும் அழி வில் முடியும். இத்தகைய இனக்கல வரத்துக்கு இடங்கொடுக்கப் போவ தில்லை என்று ஜனாதிபதி உறுதி அளித்திருக்கிறார்.

பொலீஸாரையும் ஆயுதப் படையி னரையும், கடும் சட்ட விதிகளையும் பயன்படுத்தி இனக்கலவரத்தை தடுப் பதே அரசின் திட்டமாக இருக்கும். ஆனால் அத்தகைய நடவடிக்கை எதிர்பார்ப்பதற்கு மாறாக ஆக்கபூர் வமற்ற பாதிப்பான விளைவையே அனேகமாகத் தரும்.

மாவனல்லவில் முஸ்லிம்களின் கடைகள் தாக்கப்பட்ட போது பொலீஸார் நடவடிக்கை எதுவும் எடுக்காமல் பார்த்துக் கொண்டி ருந்தார்கள் என்ற தகவல் அத னையே தொட்டுக்காட்டுகிறது.

மேலும், மாவனல்லக் கலவ ரத்துக்கு அரசில் அங்கம் வகிக்கும் அரசியல் பிரமுகர் ஒருவர் பின்னணி யில் நின்றிருக்கிறார் என்ற குற்றச் சாட்டு -

கலவரம் ஒன்று மூளும் பட் சத்தில் அது 1983 கறுப்பு ஜூலைக் கலவரம் போன்று அரசியல் நோக்கம் கொண்ட ஒன்றாக மாறாது என்று நினைக்காதிருக்க இடந்தரவில்லை.

சிங்கள - முஸ்லிம் கலவரம் ஒன்று உண்டாகாதிருக்க வேண்டு மெனில் இனத்துவேஷிகள், சம்பந் தப்பட்ட அரசியல்வாதிகள் மீது உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

# சமாதான முயற்சிகள் குறித்து ஜே.வி.பி. அமைப்புடன் பேசவும் நோர்வே தயாராக உள்ளது

## விசேட தூதர் சொல்ஹெய்ம் கூறுகிறார்

கொழும்பு,மே10

சமாதான முயற்சிகள் குறித்து எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சு நடத்தி உள் ளோம். ஜே.வி.பி. அமைப்புடனும் பேசத் தயாராக உள்ளோம்.

நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

'லங்கா அக்கடமிக்' என்ற இணை யச் செய்திச் சேவைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஏனைய நாடுகள் தடைசெய்தாலும் சமாதான முயற்சிகளின் அனுசரணை யாளரான நோர்வே புலிகளைத் தடை செய்ய மாட்டாது. இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் அனைவருக்குமே பிரச்சினைகள் உள்ளன. ஆனால் பேச்சு மேசைக்கு யார்யார் வரவேண்டும் என்பதை இலங்கை அரசும், விடுதலைப் புலி கள் இயக்கமுமே தீர்மானிக்க வேண் டும்.

இரு தரப்பினரும் பேச்சுவார்த் தைகளில் ஈடுபட்டு திருப்திகரமான தீர்வொன்று எட்டப்பட்ட பின்னர் யுத் தத்தின் தழும்புகள் ஆறும்வகை யில் அபிவிருத்திக்கு உதவி செய்ய நோர்வே தயாராக உள்ளது. உதவி வழங்குமாறு ஏனைய சர்வதேச நாடுகளை வேண்டிக்கொள்ளவும் நாம் தயாராகவுள்ளோம்.

வீணாக உயிர்கள் பலியாகிக் கொண்டிருப்பதால் விரைவில் பேச்சை ஆரம்பிப்பது மிகவும் நல்லது.

யுத்தம் விரைவில் முடிந்தால் இலங்கையின் சகல இனங்களையும் சேர்ந்த மக்களுக்கு ஒளிமிக்க எதிர் காலம் உள்ளது. சர்வதேச சமூக மும் நாங்களும் இலங்கையின் ஆட் புல ஒருமைப்பாட்டுக்குள் தமிழ் மக் களின் அபிலாஷைகள் பெருமள விற்கு நிறைவேறும் ஒரு தீர்வையே விரும்புகிறோம் - என்று சொல் ஹெய்ம் அப் பேட்டியில் தெரிவித்தி ருக்கிறார். (ஐ)

# புலிகளின் நிபந்தனையை ஏற்கோம்! யுத்தத்துக்கு மத்தியிலேயே பேச்சு!!

## 'லங்காதீபவுக்கு' அனுருத்த பேட்டி

கொழும்பு,மே 10

அரசு எக்காரணம் கொண்டும் யுத்த நிறுத்தம் செய்யாது. யுத்தத் துக்கு மத்தியிலேயே சமாதானப் பேச்சுக்கள் நடத்தப்படும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜென ரல் அனுருத்த ரத்வத்த.

'லங்காதீப' சிங்களப் பத்திரிகைக்கு அளித்த செவ்வி ஒன்றில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

பேச்சுக்களின் போக்கைக் கருத் தில் கொண்டே யுத்தநிறுத்தம் குறித்து ஆராயப்படும். முன்னர் அரசு யுத்த நிறுத்தம் செய்த சகல சந்தர்ப் பங்களிலும் புலிகள் அதனை மீறி யுள்ளனர். புலிகள் விதிக்கும் எந்த நிபந்தனையும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

நிபந்தனையற்ற பேச்சுக்கு அரசு எப்போதும் தயாராகவே உள்ளது. இதனையே நாம் தொடர்ந்து வலி யுறுத்தி வருகிறோம் - என்று அமைச் சர் ரத்வத்த கூறியுள்ளார். (ஐ-20)

# யுத்தத்தை நடத்திக்கொண்டு பேசுவது இயலாத காரியம்

## பிரதி அமைச்சர் கணேசமூர்த்தி

கொழும்பு,மே10

யுத்தத்தை நடத்திக் கொண்டு பேச்சு நடத்துவது இயலாதகாரியம். போரில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பி னரும் யுத்தத்தை நிறுத்தி சமாதான வழிகளில் தீர்வுகான முன்வர வேண் டும்.

இனவிவகார, தேசிய ஒருமைப் பாட்டு கனிப்பொருள் வள அபிவி ருத்திப் பிரதி அமைச்சர் சோ.கணே சமூர்த்தி இப்படிக் கூறியுள்ளார்.

பேச்சுக்கு முன்னர் ஒரு சுமுக மான சூழ்நிலை தோன்ற வேண்டும். சர்வதேச அரங்கும் இதனையே எதிர்பார்க்கிறது. பேச்சுக்கள் மூன் றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் நடை பெறுவதே வரவேற்கத்தக்கது. அரசு பேச்சு மூலம் தீர்வு காணவே விரும் பிச் செயற்படுகிறது. இதற்கு எதிர்க் கட்சிகளும் ஆதரவு வழங்க முன்வர வேண்டும். - என்றும் கணேசமூர்த்தி தெரிவித்தார். (ஐ)

# பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் மல்லாகத்தில் குடும்பஸ்தர் கைது

## பின்னர் மறுநாள் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,மே10

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த 6 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை ஒருவரை தாம் கைது செய்துள்ளதாக 512 ஆவது பிரிகேட் படைப்பிரிவு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத் துக்கு அறிவித்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மல்லா கத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் - ரவீந்திரன் (வயது - 37) என்பவரது கைது தொடர்பான 'ரசீது' அவரின் மனைவியிடம் வழங்கப்பட்டுள்ளதாக வும் -

கடந்த 6 ஆம் திகதி இரவு 7.40 மணியளவில் அவரது இல்லத்தில் வைத்தே அவரைக் கைது செய்த தாகவும் நேற்று 512 ஆவது பிரி கேட்டினால் மனித உரிமை ஆணைக் குழுவுக்கு 'பக்ஸ்' மூலம் தகவல் அனுப்பப்பட்டுள்ளதாக குழுவின் யாழ் அலுவலக இணைப்பாளர் ஜீவேஸ்வரா தெரிவித்துள்ளார்.

அதேநேரம் இவரது கைது தொடர் பாக அவரின் மனைவியோ அல் லது உறவினர்களோ இதுவரை தம் மிடம் முறையிடவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பிந்திக் கிடைத்த தகவல் ஒன் றின் படி - வைத்திலிங்கம் ரவீந்தி ரன் என்ற இந்தக் குடும்பஸ்தர் மறு நாள் கிராம அலுவலர் முன்னிலை யில் விடுதலை செய்யப்பட்டுவிட்ட தாக அறிவிக்கப்பட்டுள்ளது.(க-4)

## நாளை

சித்திரை 28
வெள்ளிக்கிழமை
திதி: சதுர்த்தி
முன்னிரவு 9.13 வரை.
நட்சத்திரம்: மூலம்
மாலை: 5.42 வரை.
சங்கடஹர சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 5.54 - 7.24
ராகுகாலம் : 10.24 - 11.54
(பழைய நேரப்படி)

## முருங்கைக்காய் விலையில் வீழ்ச்சி

சந்தையில் முருங்கைக்காயின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. ஒரு கிலோ முருங்கைக்காய் 20 ரூபா முதல் 25 ரூபா வரை விற்பனையாகி வருகின்றது. இதேவேளை - சின்ன வெங்காயத்தின் விலை மிகவும் அதி கரித்துள்ளது. கிலோ 55 ரூபா முதல் 60 ரூபா வரை தரத்தைப் பொறுத்து விற்கப்பட்டு வருகின்றது.

(க-135)

## உதயவாக்கு

குளம் நிறைய நீர் இருந்தாலும் நமது குடத்தின் அளவுதான் நாம் கொள்ளமுடியும். நமது பிரதி பலிப்புக்தான் பலன்.

## நீர்வேலியில் கோஷ்டி மோதல்

அரியாலை,மே10

நீர்வேலி தெற்கு மற்றும் வடக்கு பகுதி இளைஞர்களுக்கிடையேயான கோஷ்டி மோதல் இறுதியில் வாள் வெட்டில் முடிவுற்றுள்ளது.

இந்தக் கோஷ்டி மோதல் கடந்த திங்கட்கிழமை இரவு ஆரம்பமானது.

நீர்வேலி கந்தசாமி கோயிலின் மஹோற்சவம் நடைபெற்றுக் கொண் டிருந்த சமயம் திங்கட்கிழமை இரவு இளைஞர் கோஷ்டி ஒன்று ஆலய வீதியில் பொருத்தப்பட்ட 'ரியூப் லைட்'டுக்களை உடைத்து சேதப்படுத் தியதாகவும் -

இதனை அடுத்து செவ்வாய்க் கிழமை இரவு மஹோற்சவம் இடம் பெற்றுக்கொண்டிருந்த வேளை அந்த இரு கோஷ்டிகளுக்கும் இடை யில் மீண்டும் கைகலப்பு ஏற்பட்ட தாகவும் -

இந்தச் சம்பவத்தில் வாள் வெட் டுக்கு இலக்காகிய வடக்குப் பகுதி இளைஞர் ஒருவர் கோப்பாய் ஆஸ் பத்திரிக்கு சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது.

எனினும் ஆலய உற்சவம் எது வித தடங்கலும் இன்றி நடைபெற் றது.

(க-17)

## திணைக்களத் தலைவர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,மே10

மக்கள் குறை நிவர்த்தி சேவை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அனைத்துத் திணைக்களத் தலைவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

(க-6)

# சாயி சிந்தனை



## இறைவன் மீதான அபிமானமே பக்தி

விக்கிரக ஆராதனை என்பது முட்டாள் தனம் அல்ல. அது நல்ல பழக கம் தான். விக்கிரகத்தை வழிபாடு செய்யும் போது நம்மால் நம் உள்ளுணா வுகளை அதற்கேற்ப மாற்றிக்கொள்ளமுடியும். நம் வீட்டில் தாத்தா, தாத்தா வுக்குத் தாத்தா எனப் பல பேருடைய படங்களை வைத்திருக்கிறோம். நாம அந்தப் படங்களுக்குப் பூமாலை சூட்டி கௌரவிக்கின்றோம். அந்தப் படங்க ளுக்கு உயிர் உண்டா? அவற்றில் அன்பு இருக்கிறதா? சம்பந்தம் ஏதா வது நமக்குப் புரிகிறதா?. இல்லை நம்முடைய முன்னோர்கள் என்ற அபிமானத்திலேயே நாம் அந்தப் படங்களுக்கு மரியாதை செலுத்துகிறோம். அந்த அபிமானம் இல்லை என்றால், அந்தப் படங்களை எதற்கு வீட்டில் வைத்துக்கொள்ளவேண்டும்?

அதே விதம் போல், நாம் இறைவன் பால் கொள்ளும் அபிமானம்தான் பக்தி. அந்த அனுவின் மேல் வைக்கும் நம்பிக்கையே பக்தி. அந்த அனுவே தெய்வம்.

ஆகையால் கடவுள் எங்கே இருக்கிறார் என்றால், அங்கேயே, அங்கேயே இருக்கிறார், எல்லா இடத்திலும் இருக்கிறார். ஆனால் இதை உணர்ந்து, புரிந்து கொள்வது மிகக் கடினம். உண்மையான நம்பிக்கை மனதில் வள ரும் பொழுது, புரிந்து கொள்வது என்பதும் சுலபமாகிறது.

இவற்றை எல்லாம் தெரிந்து கொள்வதற்கு முன்புதான் எத்தனையோ வகையான சந்தேகங்களும், வாதங்களும், எதிர் வாதங்களும் உங்கள் மனதில் எழுகின்றன.

*(சனாதன சாரதி ஏப்ரல் - 1995)*

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



அழிந்த பிரதேசங்களின்
யுத்த எச்சங்கள்
ஆவலாய்க் காத்திருக்கின்றன
மிச்ச அழிவுக்காய்!

### சுகாதாரச் சீர்கேடுகள் குறித்து! வழக்கு:

## பேக்கரியின் உற்பத்தியை இடைநிறுத்தி திருத்த வேலைகள் செய்ய உத்தரவு

சண்டிலிப்பாய்,மே10

சுகாதார சீர் கேடுகளுடன் செயற்பட்டு வந்த சில்லாலையிலுள்ள பேக்கரியின் உற்பத்தி வேலைகளை இடைநிறுத்தி திருத்த வேலைகளை மேற்கொள்ளுமாறு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

குறிப்பிட்ட பேக்கரி சுகாதார விதிகளுக்கு முரண்பட்ட விதத்தில் இயங்கி வருவதாக பண்டத்தரிப்பு பொது சுகாதாரப் பரிசோதகர் எஸ்.இராசதுரை உணவுச் சட்டத்தின் கீழ் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபபட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதைத் தொடர்ந்து இன்று 10 ஆம் திகதிமுதல் பேக்கரியை மூடி திருத்த வேலைகளை வலி.தென் மேற்குப் பிரதேச சபையின் உப விதிகளுக்கிணங்க மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும்- சுகாதார குறைபாடுகள் அகற்றப்பட்ட பின்னர் அது பற்றிய விவரத்தை நீதிமன்றத்திற்குத் தெரிவித்து அனுமதியைப் பெற்று பேக்கரியை மீண்டும திறந்து உற்பத்தியை ஆரம்பிக்க வேண்டும் என்றும் நீதிபதி தமது தீர்பபில் உத்தரவிட்டுள்ளார். (க-135)

### பொது மண்டபம் விரைவில் திறப்பு

சண்டிலிப்பாய்,மே 10

மாதகல் சகாய புரம் கிராமத்தில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் (ஜி.ரி.செட்) உதவியுடன் நிறுவப்பட்டு வரும் பொது மண்டபத்தின் கட்டட வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

இக்கட்டடம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. (க-135)

### தமிழ் விழாவில் இன்றைய நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே 10

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றம் நடத்தும் தமிழ்விழாவின் ஆறாம்நாள் நிகழ்வுகளில் இன்று மாலை 5 மணியளவில் உளவியல் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

திருமறைக் கலாமன்ற கலைத் தூது மணி மண்டபத்தில் வண.பிதா எஸ்.டேமியன் தலைமையில் ஆரம்பமாகவுள்ள இக்கருத்தரங்கில் 'இருப்பு சார் சீர்மியம்' என்னும் பொருளில் பேராசிரியர் நீ.மரியசேவியர் உரை நிகழ்த்துவார்.

கருத்தரங்கைத் தொடர்ந்து நடைபெறும் அரங்க நிகழ்வில் கலாநிதி க.குணராசாவின் (செங்கையாழியான்) அகவை அறுபது நிகழ்வில் பாராட்டு விழா நடைபெறவுள்ளது. (க-5-6)

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்:

## யாழ்.செயலகத்தில் நடந்தால் மட்டுமே கலந்து கொள்வேன்

### விநாயகமூர்த்தி எம்.பி. நிபந்தனை

யாழ்ப்பாணம்,மே10

யாழ்.மாவட்ட அபிவிருத்தி மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ்.செயலகத்தில் இடம் பெற்றால் மட்டுமே அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வேன்.

- இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க காங்கிரஸ் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி அறிவித்துள்ளார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் காலை 10 மணிககு கட்சியின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்தில் தமிழ்க் காங்கிரஸின் அபிமானியும் "உதயன்" பத்திரிகையின் நிர்வாக முகாமையாளருமான க.நந்தகுமார் மற்றும் காங்கிரஸ் கட்சியின் திருமலை அமைப்பாளர் வை.இராசக்கோன் கொழும்புக் கிளைத் தலைவர் ஈ.டபிள்யு.தேவராஜா ஆகியோரின் மறைவுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

எதிர்வரும் 17 ஆம் 18 ஆம் திகதிகளில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ் செயலகத்தில் நடந்தால் மட்டுமே அதில் பங்குபற்றுவேன். அவ்வாறு இல்லாமல் வேறு இடத்தில் நடந்தால் கலந்து கொள்ள மாட்டேன் என்று விநாயகமூர்த்தி அங்கு மேலும் தெரிவித்தார்.

மாவனல்ல பிரதேசத்திலும் மூதூர் பிரதேசத்திலும் இடம்பெற்ற முஸ்லிம்கள் மீதான பேரினவாதிகளின் தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவிக்கும் தீர்மானமும் - முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணித் தலைவர் முஜிபுர் ரஹ்மான் கைது செய்யப்பட்டதை ஆட்சேபிக்கும் கண்டனத் தீர்மானமும் அங்கு நிறைவேற்றப்பட்டன. (க-6)

### சிரமதானம்

தென்மராட்சி,மே 10

உலக செஞ்சிலுவை தினத்தையொட்டி வடமராட்சி செஞ்சிலுவைச் சங்கத்தினர் கடந்த திங்கட்கிழமை மந்திகை ஆஸ்பத்திரியில் சூழல் அபிவிருத்தி (சிரமதானம்) பணியை மேற்கொண்டனர்.

ஆஸ்பத்திரி வளவில் காணப்பட்ட பற்றைகள் வெட்டித் துப்புரவு செய்யப்பட்டன. (க-117)

### பெரியபுராண படனம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே10

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் பெரியபுராணப் படனம் நேற்று ஆரம்பமானது.

இந்த ஆலயத்தில் வருடந்தோறும் பெரியபுராண படனம், கந்தபுராண படனம், திருவிளையாடற்புராண படனம் ஆகியன இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (க-3)

### நோயாளருக்கு மதிய உணவு படையினர் வழங்கினர்

தென்மராட்சி,மே10

வெசாக் தினத்தையிட்டு வடமராட்சிப் பகுதியிலுள்ள படைமுகாம்களில் பொதுமக்களுக்கு இனிப்புப் பண்டங்கள், பிஸ்கட்டுக்களைப் படையினர் வழங்கினர். வல்லைச் சோதனைச் சாவடியூடாகப் பயணம் செய்தவர்களுக்கு பிஸ்கட்டும் பழரசமும் வழங்கப்பட்டன.

இதேவேளை- மந்திகை ஆஸ்பத்திரியில் தங்கியுள்ள நோயாளர்களுக்கு செவ்வாய்க்கிழமை மதிய உணவு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-117)

## கொழும்பில் சிங்கள - முஸ்லிம் மக்கள் இடையே முறுகல் நிலை

### தூண்டிவிடும் பிக்குமார், அரசியல்வாதிகள்

கொழும்பு,மே10

மாவனல்ல பகுதியில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை அடுத்து கொழும்புப் பகுதியில் இரு சமூகங்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை இன்னும் தணியவில்லை என்று கூறப்படுகிறது.

இரு இனங்களையும் சேர்ந்தவர்கள் ஒருவரை ஒருவர் பழிவாங்கும் நோக்கத்துடன் திட்டமிட்டு வருவதாகவும் இதற்கு பௌத்த பிக்குகளும் முஸ்லிம் அரசியல் வாதிகளும் தூபமிட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக ஊர்வலம் ஒன்றை நடத்துவதற்கு பௌத்தபிக்குகள் தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளதாக கொழும்புத் தகவல்களை மேற்கோள காட்டி ஏஜென்ஸிச் செய்தியொன்று தகவல் வெளியிட்டுள்ளது. (க-6)

## பளைப் பகுதி வர்த்தகர்களுக்கு 2 1/2 கோடி ரூபா சொத்துகள் இழப்பு

தென்மராட்சி,மே 10

பளைப் பிரதேச மக்கள் இடம் பெயர்ந்த வேளையில் அப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் கைவிட்டு வந்த வியாபாரப் பொருள்கள், தளபாடங்கள் ஆகியவற்றின் பெறுமதி 2 கோடி 64 லட்சம் ரூபா என மதிப்பிடப்படுள்ளது.

பளை வணிகர் மன்றத்துக்கு வழங்கிய இழப்பீட்டுப் படிவங்களிலிருந்து இந்தக் கணிப்பு கணக்கிடப்பட்டதாக மன்றத் தலைவர் வை.சற்குணம் தெரிவித்தார். (க-117)

## வாசகர் திருமுகம்

### யாழ். ஆஸ்பத்திரியில் தொடரும் மருந்துத் தட்டுப்பாடு

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கான மருந்துப் பொருட்கள் அடிக்கடி தட்டுப்பாடாகவும், அவ்வப்போது இல்லாமலும் போவது வழக்கமாகவும் சாதாரணமாகவும் மாறிவிட்டது.

இவ்வகையில் கால், கை முறிந்து, உடைந்து நோவோடு வரும் நோயாளர்கள் "காட்போட்" இனால் தற்காலிகமாகச் சுற்றிக்கட்டப்பட்ட நிலையில், கொழும்பிலிருந்து எடுத்து வரப்படும் 'Plaster of Paris' (POP) இற்காகச் காத்திருக்கிறார்கள். இப்பொருள் வந்துசேர இன்னும் எவ்வளவு காலம் எடுக்கும் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். ஏனெனில், மேற்சொன்ன பொருள் இருவார காலமாக இல்லையென்று நோயாளர்கள் வேதனையோடு கூறுகிறார்கள்.

சாதாரணமாகவே இப்பொருள் கையிருப்பில் இருக்க வேண்டிய ஒன்று. அத்துடன் மீண்டும் சண்டை உக்கிரமடைந்திருக்கும் இந்த நேரத்தில் இப்பொருளின் தேவை எத்தகையது என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

இக்கட்டான சூழலில் இயங்கும் ஒரு போதனா வைத்தியசாலைக்கு, மிகவும் அடிப்படையான மருத்துவப் பொருள்களை அனுப்பி வைப்பதில் எவ்வளவு அக்கறையோடு சுகாதார அமைச்சு செயற்படுகிறது என்பது இதிலிருந்து புலனாகிறது.

அப்படியாயின், மருத்துவப் பொருள்களின் பற்றாக்குறை, இல்லாக் குறை எல்லாம் தொடர்கதைதானா? இவற்றை நிவர்த்தி செய்ய இனி யாரிடம் போவது? எங்கு எடுத்துச் சொல்வது?

*புதிய வேளாங்கண்ணி ஆலயம்,*
*யாழ். போதனா வைத்தியசாலை.*

செ.அன்புராசா
(ஆன்மகுரு)

### வாசகர் திருமுகத்துக்கு அதிகாரியின் பதில்

"புங்குடுதீவுக்கு தனியான பஸ்சேவை இல்லாததால் அரச ஊழியர் சிரமம்" என்ற தலைப்பில் தங்களது 2001.04.16ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் "வாசகர் திருமுகம்" பகுதியில் பாதிக்கப்பட்ட அரச ஊழியர் என்ற பெயரில் வரையப்பட்டுள்ள திருமுகம் சம்பந்தமாக, பின்வருவனவற்றை மக்கள் அறிந்து கொள்வதற்காக இங்கே தருகின்றேன்.

அரசாங்க உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் நலன் கருதி வேலணை உதவி அரசாங்க அதிபர், புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர் ஆகியோரின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ்ப்பாணத்திலிருந்து காலை 7.45 மணிக்கு ஒரு பஸ்சேவை (கடந்த 2001.03.27ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது) புங்குடுதீவு, இறுப்பிட்டிவரை நடத்தப்பட்டு வருகின்றது. அத்தோடு பிற்பகலிலும் இறுப்பிட்டியில் இருந்து 2.30 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் வருவதற்கு ஒரு சேவை இத்திகதியிலிருந்து நடத்தப்பட்டு வருகிறது.

இச்சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதை அடுத்து புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர் அவர்கள் தமது நன்றியையும், பாராட்டுதலையும் எமக்கு அறியத்தந்துள்ளார்.

இதனைத் தங்கள் பத்திரிகையில் பிரசுரித்து மக்கள் அறிந்து கொள்ள உதவும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

*கோண்டாவில்.*

பொதுமுகாமையாளர்,
வ.பி.போ.ச.

### நடவடிக்கை எடுப்பார்களா?

யாழ்.குடாநாட்டில் சகல வைத்தியசாலைகளிலும் பணிபுரியும் சிற்றூழியர்களுக்கு அண்மையில் புதிய சீருடைக்கான துணிகள் வழங்கப்பட்டது. இவற்றில் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் வைத்தியசாலை சிற்றூழியர்களுக்கு தரம் குறைந்த சீருடைக்கான துணிகளே கிடைத்துள்ளன. ஆனால் மத்திய அரசின் கீழ் இயங்கும் வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மிகவும் தரம் வாய்ந்த சீருடைத்துணி வழங்கப்பட்டுள்ளது.

பலமாதங்களுக்குத் தொடர்ந்து பாவிக்க வேண்டிய துணி இப்படித் தரம் குறைந்து இருப்பது மிகவும் சிரமத்திற்குரியதொன்றாகவே உள்ளது. மத்திய அரசின் கீழ் உள்ள வைத்தியசாலை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சீருடைக்கான துணி தரம் வாய்ந்ததாக இருக்கும் போது மாகாணசபையின் கீழ் இயங்கும் வைத்தியசாலை ஊழியர்களின் துணி ஏன் மிகவும் தரம் குறைவாக உள்ளது.

சுருங்கும் தன்மையுள்ள சீருடைக்கான துணியைத் தொடர்ந்து அணிவதால் சிரமத்தை எதிர்நோக்கும் எங்களது பிரச்சினையை சம்பந்தப்பட்ட பணிபாளர்கள் கவனத்தில் எடுப்பார்களா? ஊழியர் விடயத்தில் சம்பந்தப்பட்ட கட்சிகள் நடவடிக்கை எடுக்குமா?

*கரவெட்டி.*

- பாதிக்கப்பட்ட ஊழியர்கள்.


## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 15 - 03 - 1955



உதிர்வு 10 - 05 - 1998

திருமதி

### யேசுதாசன் வசந்தா புஸ்பராணி

ஆண்டுகள் மூன்று போனதம்மா, துயரங்கள் குறையவில்லை!
ஆறநினைக்கின்றோம்; அது எம்மால் முடியவில்லை !

*112, பருத்தித்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*கரம்பொன் தெற்கு,*
*ஊர்காவற்றுறை.*

பிரிவால் துயருறும்:
கணவன்,
பிள்ளைகள்.

(87584)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 11 - 01 - 1976



விண்ணில் 10 - 04 - 2001

### செல்வன் வைத்திலிங்கம் அருட்சுதன்

எங்கள் அன்புச் செல்வமே அருட்சுதா!
ஏங்குதடா உன் பிரிவால் எங்கள் மனம்!
எல்லையற்ற பாசத்தை நீ எங்களிடம் தந்துவிட்டு,
பாதியிலே நீ பறந்தோடிய மாயமென்ன மாயமோ?

இன்று (10.05.2001) வியாழக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் அன்பு அருட்சுதனின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*அராலி தெற்கு,*
*அராலி.*

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, பெரியப்பா, பெரியம்மா,
சித்தப்பாமார், சித்திமார், மாமா, மாமி,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
மருமக்கள், பெறாமக்கள்.

(87581)

# என்றும் இல்லாத பரபரப்பு

# பாண்டிச்சேரி தேர்தல் களம்

தமிழகத்தின் இடுப்பில் ஒட்டி இருக்கும் யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் சட்ட சபைத் தேர்தல் இந்திய அரசியலில் வழக்கமாகப் பரபரப்பை ஏற்படுத்துவதில்லை. ஆனால் இந்தமுறை பாண்டிச்சேரியன் தேர்தல் முடிவுகளை அனைவரும் ஆவலுடன் எதிர் நோக்குகின்றனர்.



மூப்பனார்

மாநிலக் கட்சியான- அதுவும் ஜாதிக்கட்சி என்று கருதப்படும் - பாட்டாளி மக்கள் கட்சி பாண்டிச்சேரியில் ஆட்சி அமைக்கும் என்று அதன் நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்திருப்பதே இதற்குக் காரணமாகும்.

அதுவும் தேசியக் கட்சியான காங்கிரஸ் ஆட்சி நடைபெறும் பாண்டிச்சேரியில் அதற்கு எதிராக விடுதலைப புலிகளின் தீவிர ஆதரவாளரான ராமதாஸின் கட்சி - சவால்விடும் நிலைக்கு உயர்ந்துள்ளது.

ஏற்கனவே அங்கு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நடவடிக்கைகள் அதிகமாக இடம்பெறுவதாகக் கூறப்படும் சமயத்தில், பா.ம.க.ஆட்சியைப் பிடித்தால், விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கசப்புணர்வு நிலவுவதாக மேற்கொள்ளப்படும் பிரசாரம் புறந்தள்ளப்படும் என்று கருதப்படுவதால், பாண்டிச்சேரித் தேர்தல் முடிவுகள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

### களத்தில் 3 அணிகள்

பாண்டிச்சேரித் தேர்தலில் பிரதானமாக 3 அணிகள் இந்தத் தடவை களத்தில் உள்ளன.

தி.மு.கவுடன் புதுவை மக்கள் காங்கிரஸ் இணைந்து ஓர் அணியில் போட்டியிடுகிறது.

அ.தி.மு.கவுடன் பா.ம.க. இணைந்து ஓரணியிலும் -

காங்கிரஸ் - த.மா.கா. மற்றொரு அணியாகவும் -

களத்தில் உள்ளன.

பாண்டிச்சேரியின் மொத்த சட்ட மன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை 30. அங்கு கூட்டு அரசுகளே ஆட்சியில் இருப்பது வழக்கம்.

தமிழகத்தில் காங்கிரஸின் செல்வாக்கைக் குலைத்து ஆட்சியைக் கைப்பற்றிய திராவிடக் கட்சிகளால் பாண்டிச்சேரியில் காங்கிரஸின் செல்வாக்கை அடியோடு தகர்க்க முடியாமல போனதால், காங்கிரஸின் ஆதரவு திராவிடக் கட்சிகளுக்குத் தேவைப் பட்டது. இந்தச் சூழ்நிலையில் காங்கிரஸில் இருந்து த.மா.கா. பிரிந்த போது, காங்கிரஸ், அ.தி.மு.கவுடனும், தி.மு.க.வுடன் த.மா.காவும் கூட்டணி அமைத்தன.

இரு அணிகளும் சம பலத்தில் இருந்ததால் பாண்டிச்சேரியில் அதிக

## இன்றைய வாக்களிப்பின் முடிவு ஞாயிறு தெரியவரும்

எண்ணிக்கையில் வாழும் வன்னியர்களிடம் ஆதரவு பெற்ற பா.ம.கவின் முக்கியத்துவம் அதிகரித்தது.

பா.ம.க. உருவாக முன்னர் அங்கு



கண்ணன்

சுயேச்சையாக ஜெயிக்கும் உறுப்பினர்களின் ஆதரவைக் கட்சிகள் நாடி நின்றது தனிக்கதை.

மாறறக் கட்சிகளுக்குப் பல்லக்குச் சுமந்த பா.ம.க. இந்தத் தடவை தானே ஆட்சிப் பல்லக்கில் ஏற முடிவு செய்தது.

அதற்கு ஏற்றாற் போல தமிழகத்தில் தனக்கு வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகளை அ.தி.மு.கவுக்கு தாரை வார்த்து விட்டு, பாண்டிச்சேரியில் தனது கைமேலோங்குமாறு டாக்டர் ராமதாஸ் பார்த்துக் கொண்டார்.

பாண்டிச்சேரியில் அ.தி.மு.க கூட்டணி வெற்றி பெற்றால் முதல் இரண்டரை ஆண்டுகள் பா.ம.கவும், அடுத்த இரண்டரை ஆண்டுகள் அ.தி.மு.கவும் ஆட்சிக்குத் தலைமை வகிக்கும் என்று ஜெயலலிதாவைக் கொண்டே அறிவிக்கச் செய்ததா் டாக்டர் ராமதாஸ்.

ஆட்சிப் பல்லக்கில் அமர்ந்து பழகிவிட்ட காங்கிரஸாருக்கு இந்த அறிவிப்பு எரிச்சல் ஊட்டியது.

விளைவு, தமிழகத்தில் அ.தி.மு.க கூட்டணியில் இணைந்துள்ள த.மா. காவும் காங்கிரஸும் பாண்டிச்சேரியில் அ.தி.மு.க. - பா.ம.க. கூட்டணியை எதிர்த்து மூன்றாவது அணியை அமைத்த விநோதம் நிகழ்ந்துள்ளது.

இந்த நிலையில் பாண்டிச்சேரித் தோதல் வெற்றி வாய்ப்பு மதில் மேல் பூனையாக அமைந்துள்ளது. அது எந்தப்பக்கம் பாயும் என்பது இன்று நடைபெறும் தேர்தலை அடுத்துத்தான் தெரியவரும்

பாண்டிச்சேரி த.மா.காவின் தலைவராகப் பதவி வகித்து கண்ணன் அக் கட்சியை விட்டு வெளியேறி 'புதுவை மககள் காங்கிரஸ்' என்ற புதிய கட்சியை தேர்தல் சமயத்தில் உருவாக்கினார். அக்கட்சி தி.மு.கவுடன் இணைந்து போட்டியிடுகிறது.

தமக்கு எதிரான வாக்குகள் அ.தி. மு.க. அணி, காங்கிரஸ் அணி என்று இரண்டாகப் பிரிவதால், தமக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்று தி.மு.க. கூட்டணி கூறுகிறது.

காங்கிரஸின் முக்கிய புள்ளிகள் த.மா.காவாக வெளியேறி, பின்னர் த.மா.காவும் பிளவுபட்டு கண்ணன் தலைமையில் புதிய கட்சி உருவானதால், காங்கிரஸ், த.மா.கா. கூட்டணி கழுதை தேய்ந்து கட்டெறும்பானதைப் போல் செல்வாக்கற்று இருப்பதாகவும் தி.மு.க.தரப்பில் கூறப்படுகிறது.

ஆனால் மிகச் சிறிய பிரதேசமான பாண்டிச்சேரியில், கண்ணனின் பிரிவால் ஒரிரு இடங்களில் மட்டுமே தமகுப் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக காங்கிரஸ் தரப்பினர் வாதிடுகின்றனர்.



கருணாநிதி

### காங்கிரஸின் நம்பிக்கை

தற்போது த.மா.கா. தம்முடன் இணைந்திருப்பதால் பழைய பிளவு படாத காங்கிரஸின் பலம் மீண்டும் கிடைத்துவிட்டதாக அவாகள் உற்சாகமாகக் கூறுகின்றனர்.

ஆகவே தேர்தலில் அதிக இடங்களைக் கைப்பற்றி பாண்டிச்சேரியில் மீண்டும் ஆட்சி அமைக்கும் வாய்ப்பு தமக்கே இருப்பதாக காங்கிரஸ் கூட்டணியினர் மார்தட்டுகின்றனர்.

ஜெயலலிதா தமிழகத் தேர்தலில் தீவிரமாகக் கவனம் செலுத்தி வந்ததால், பாண்டிச்சேரியில் அதி.மு.க. கூட்



ராமதாஸ்

டணியின் தனிக்காட்டுராஜாவாக இருக்கிறார் பா.ம.க. தலைவர் ராமதாஸ்.

ஆரம்பத்தில் சமயோசிதமாக காய்களை நகர்த்தி வந்த ராமதாஸ், வேட்பாளர் தேர்வின் போது தன்னிச்சையாக முடிவுகளை எடுத்ததால் அ.தி.மு.க. கூட்டணியின் வெற்றி வாய்ப்பு சற்றுக் குறைந்திருப்பதாகவே கருதப்படுகிறது.

தனது உறவினரான பேராசிரியர் தன்ராஜ் என்பவரை எடப்பாக்கம் தொகுதியின் வேட்பாளராக ராமதாஸ் அறிவித்த போது, கட்சியில் பிளவுக்கு பிள்ளையார் சுழி இடப்பட்டது. அ.தி. மு.க கூட்டணி வெற்றி பெற்றால் தன்ராஜ்தான், முதல்வர் என்று ராமதாஸ் தெரிவிக்கவே பிரதேச பா.ம.க. தலைவர் உட்பட முக்கிய தலைவர்கள் சிலர் கட்சியிலிருந்து வெளியேறி விட்டனர்.

இந்தப் பிளவினால் பா.ம.க. தொண்டர்களிடம் சோர்வு ஏற்பட்டிருப்பது சந்தேகமில்லாமல் புரிகிறது.

கட்சியை விட்டு வெளியேறியவர்கள் பா.ம.க.வின் வெற்றி வாய்ப்பை பெரிதும் பாதித்திருப்பதாக அவதானிகள் கூறுகின்றனர்.

இந்த நிலையிலும் அ.தி.மு.க. கூட்டணி ஆட்சியைப் பிடிக்கும் என்று பா.ம.கவினர் உறுதியாகவே கூறுகின்றனர்.

**சென்னையிலிருந்து 'இந்திரஜித்'**

தி.மு.கவை விட பொதுவாக அ.தி. மு.கவுக்கு பாண்டிச்சேரியில் வாக்குகள் கிடைக்கும் வீதம் அதிகமாக இருப்பதைச் சுட்டிக் காட்டும் அவர்கள், சிதறாத அ.தி.மு.க. வாக்குகளுடன், வன்னியர் இன வாக்குகளும் ஒன்று சேர்ந்து தமக்கு வெற்றிகளை அள்ளிக் குவிக்கப் போவதாகக் கூறுகின்றனர்.

### தேர்தல் முடிந்த பின்னரே திருப்பங்கள்

ஆனால் பாண்டிச்சேரியில் உண்மையான பரபரப்பு தேர்தல முடிவுகளுக்குப் பின்னர்தான் உருவாகும் என்று அரசியல அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய நிலைவரப்படி, எந்தக் கூட்டணிக்கும் பெரும்பான்மைப் பலம் கிட்டப்போவதில்லை என்று அவர்கள் கூறுகின்றனர்.

அப்படியொரு நிலை உருவாகும் பட்சத்தில் ஆள் பிடிப்புகள் மற்றும் கட்சித் தாவல்களால் பாண்டிச்சேரி அரசியல் கதிகலங்கும் என்று அரசியல நோக்கர்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஆனால் இவற்றுக்கான விடையை தத்தமது மனங்களில் பூட்டி வைத்தபடி, இன்று வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்கின்றனர் பாண்டிச்சேரி வாக்காளர்கள். அவர்களது தீர்ப்பு என்னவென்று ஞாயிறு மாலை தெரிந்துவிடும். ☆

# பாடப் புத்தகங்களுக்குத் தட்டுப்பாடு; ஆனால் மதுவகையோ தாராளம்

குடாநாடு போர் அவலங்களால் ஒருபுறம் சிதைந்து, சீரழிந்து வருகிறது. மறுபுறம் இந்த மண்ணின் மைந்தர்கள் குறிப்பாக இளைய தலைமுறையினர் மதுபானம், போதைவஸ்து ஆகியவற்றின் பாவனையிலிருந்து மீள முடியாமல் மரணப் புதைகுழிக்குள் புதைந்து கொண்டிருக்கிறார்கள்.

இன்று குடாநாட்டில் காணப்படும் சூழ்நிலையானது மக்களை இத்த

**போதை அரக்கனை சாய்க்கும் முயற்சியில் யாழ்.பல்கலைக் கழக சமூகம்**

கைய பழக்கங்களுக்கு அடிமையாக குவதில் மிகவும் காத்திரமான பாத்திரத்தை வகிக்கின்றது.

தொடரும் போரினால் ஏற்படும் இடப்பெயர்வுகள், குடும்பச்சிதைவுகள், மிதிவெடிகள் உட்பட பல்வேறு ஆபத்துக்களில் ஏதாவது ஒன்றால் குடும்பத் தலைவர் அல்லது வருமானத்தை ஈட்டுபவர் இறந்து அல்லது அங்கவீனமாகி, வருமானமிழந்து, நிவாரணத்தை மட்டுமே நம்பி வாழும சூழ்நிலை ஆகிய காரணங்களால் குடாநாட்டுச் சமூகத்தின் கணிசமான பகுதியினர் மன அழுத்தத்தில் சிக்கித் தவிக்கின்றனர்.

இவற்றை எதிர்கொள்ளப் போதிய உளவியல் பலமின்றியும், இவற்றுக்கெல்லாம் "மருந்து" மதுபானம் என்ற தவறான சிந்தனையாலும், எம்மவர்கள் இப்பழக்கத்திற்கு அடிமையாகி விடுகின்றனர். அத்தோடு இன்று யாழ்ப்பாணத்தில் மதுபானம், புகைப் பொருள்கள் என்பன தாராளமாகக் கிடைக்கின்றன. இவற்றை விற்பனை செய்யும் நிலையங்கள் புற்றீசல்கள் போல மூலை முடுக்கெல்லாம் புதிது புதிதாய் முளைவிடுகின்றன. சட்ட விரோத கசிப்பு உற்பத்தியும் முன்னொரு போதும் இல்லாத அளவிற்கு உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

அட்டவணையை நோக்குகின்ற போது சனத்தொகை வளர்ச்சிவீதமானது மிகக் குறைவாகக் காணப்படும் அதேவேளையில் மது நுகர்வானது மூன்று ஆண்டுகளிற்குள் ஏறத்தாழ மூன்று மடங்காக அதிகரித்து அத்துடன் சட்டரீதியாக அனுமதிக்கப்பட்ட மது அருந்துமிடஙகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இன்று யாழ்ப்பாணத்தில் காணப்படும் மது விற்பனை நிலையங்களின் எண்ணிக்கையானது சட்டரீதியாக அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையிலும் பல மடங்காகக் காணப்படுகிறது. அததுடன் நடப்பாண்டின் முதற்காலாண்டில் சட்டவிரோதமான மது உற்பத்தியாளர்கள் யாழ். பொலீஸ் பிரிவில் 80 பேரும், பருத்தித்துறை பொலீஸ் பிரிவில் 70 பேரும், மல்லாகம் பொலீஸ் பிரிவில் 65 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். 1995 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் சட்டவிரோத மது உற்பத்தி மிக மிகக் குறைவாகவே காணப்பட்டது.

அட்டவணையில் குறிப்பிட்ட மதுநுகர்வானது யாழ்ப்பாணத்தில் சட்டரீதியாக விற்கப்பட்ட மதுபான அளவையே குறிக்கிறது. இதில் கசிப்பு மற்றும் சட்டவிரோதமாக இயங்கும் மதுபானசாலைகள், கள்ளு விற்பனை என்பன உள்ளடக்கப்படவில்லை.

### எதிர்நோக்கும் அவலங்கள்

இன்று க.பொ.த. சாதாரண தர, உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடையும் மாணவர்களின் வீதம் வீழ்ச்சி கண்டுள்ளது. மது மற்றும் புகைத்தல் பொருள்கள் உட்பட சமூகத்திற்குத் தீங்கு விளைவிப்பவை மிகத் தாராளமாகக் குறைந்த விலைக்கே கிடைக்கும் போது மாணவர்களுக்குத் தேவையான பாடப்புத்தகங்கள் மட்டும் 4 மாதகாலமாகியும் முற்றாக இன்னும் வந்து சேராத நிலையிலேயே உள்ளன. இதற்குப் போக்குவரத்துப் பிரச்சினை காரணமாகக் கூறப்படுகின்றது. ஆனால் இந்தப்

**யாழ்ப்பாணச் சனத்தொகையும் மது நுகர்வும்**

| ஆண்டு | சனத்தொகை | மொத்த மதுபான நுகர்வு (லீற்றரில்) | சட்டரீதியாக யாழ் மாவட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட Bar களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1996 | 421904 | - | - |
| 1997 | 466937 | 236875 | 20 |
| 1998 | 457267 | 480603 | 24 |
| 1999 | 491007 | 591963 | 30 |
| 2000 | - | 687469 | - |
| 2001 | - | 400000 | - |

2001 இன் முதல் மூன்று மாதங்களுக்குரியது

( - விவரம்கிடைக்கவில்லை)

போக்குவரத்துப் பிரச்சினைகளுக் கூடாகவே தென்பகுதியில் இருந்து குடாநாட்டுக்கு இவ்வாண்டின் முதற் காலாண்டினுள் மட்டும் 4 இலட்சம் லீற்றர் மதுபானம் வந்து சேர்ந்தது. இது யுத்தத்தால் சிதைந்து போயுள்ள எமது மக்களின் புனர்வாழ்வையும் கல்வியையும் எந்த வகையில் மேலும் சீரழிக்கும் என்பதை யாழ்.குடாநாட்டு மக்கள் புரிந்துகொள்வார்கள்.

யாழ்குடாநாட்டு மக்களின் தொழில் வளங்கள் இன்று இடம்பெயர்வு காரணமாக முடக்கப்பட்டுள்ளன. மீனவர்கள் கடல் தடை சட்டத்தாலும் விவசாயிகள் பயிரிட முடியாமலும் பயிரிட்ட பொருள்களைச் சந்தைப்படுத்த முடியாமலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதனால் பெரும்பாலான குடும்பங்களில் பொருளாதார நெருக்கடி

(8ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் பெயரை மீண்டும் 'சிலோன்' என மாற்ற வேண்டும்!

## ஓர் எண்சோதிட ஆய்வு

இலங்கையின் பெயர் 'CEYLON' என்று இருந்து எப்பொழுது SRILANKA என்று மாற்றப்பட்டதோ அன்றில் இருந்து இந்த நாட்டில் இனக் கலவரம், வன்முறை, யுத்த பொருளாதார வீழ்ச்சி என்பன தொடர்ந்தபடி உள்ளன. இவற்றிற்குக் காரணம் நாட்டின் பெயர் பொருத்தமின்மை தான் என்பதை எண்சோதிட ரீதியாக விளக்க முற்படுகின்றேன். நான் ஒரு சோதிடன் அல்லன். எனினும் எண் சோதிடத்தில் எனக்குள்ள நம்பிக் கையை - அறிவை - அடிப்படையாகக் கொண்டு சில ஆலோசனைகளை உங்கள் முன் வைக்க விரும்புகின்றேன். எண்சோதிட ரீதியாகச் SRI-LANKA என்பதைக் கணக்கிட்டுப் பார்த்தால் SRILANKA 32131521=18 என்னும் எண் வருகின்றது.

**T.A.பவனேஸ்வரன்**
**கரவெட்டி**

இந்தப் '18' என்ற எண் 9 என்ற எண்ணின் இனத்தைச் சார்ந்தது. 9,18,27,36,45,54,63,72,81..... ஆகிய 9 எண் இனத்தின் வரிசையில் '18' என்னும் எண் ஒரு துர்ப்பாக்கிய எண் என்றே கூறவேண்டும். பண்டிட் சேதுராமனின் எண்சோதிடநூலில் '18' என்னும் எண்ணை விளக்குகையில், பாரதயுத்தம் 18 தினங்கள் நடைபெற்றன. அந்த யுத்தத்தில் 18 படைகள் போரிட்டன. 18 சைன்யங்கள் போரிட்டன. எல்லாமே 18 ஆகத் தான் இருந்தன. பகவத் கீதைபுத்தகம் 18 அத்தியாயங்களைக் கொண்டது என்று நூல் ஆசிரியர் சுட்டிக் காட்டுகின்றார். எங்களது நாட்டிலும் யுத்தம் தொடங்கி 18 வருடங்களாகி விட்டன. இந்த எண் ஒரு யுத்த எண் என்பது இதன் மூலம் தெரிகின்றது.

18 என்னும் இலக்கம் குறித்து பண்டிட் சேதுராமனின் நூல் ஒன்றில் கூறப்பட்டுள்ளவற்றைத் தனியாகக் கட்டம் கட்டி இணைத்துள்ளேன்.

### '18' எண் பற்றி.........

தெய்வீகத்தின் வீழ்ச்சியைக் குறிக்கும் இவ்வெண் கஷ்டங்களையும், காரியங்களுக்கு வீண்தாமதத்தையும், சூழ்ச்சிகளையும், ஆபத்தான எதிரிகளையும் உண்டுபண்ணும். இதனால் குறிக்கப் பெறுவோர் சமூக விரோதமான காரியங்களில் சுய நலத்தால் தூண்டப்பட்டு ஈடுபடுவர். மனமறிந்து தவறான தீய காரியங்களைச் செய்ய நேரும். சுய நலமே வளரும். அருளும், அமைதியுமற்ற பாபகரமான வாழ்க்கை அமையும். இவ்வெண் ஆசைகள் வளர்ந்து தெய்வீகத்தை அழிப்பதைக் குறிக்கிறது. ஆசைகள் முடிவடையும். அருளழியும் (பாரத யுத்தம்)18 நாள்கள் நடந்தது. 18 சைன்யங்கள் யுத்தம் புரிந்தன. இந்த தாயாதிப் போரில் பாண்டவர்கள் உறவினரில் மூத்தோரையும், ஆசிரியர்களையுங் கூடக் கொல்ல நேர்ந்தது. 18 அத்தியாயங்களாக அமைந்த பகவத்கீதை மிக்க மேலான கிரந்தமான போதிலும் அச்சமயம் யுத்தத்திற்கு தூண்டுகோலாயிற்று. பொறாமை, வஞ்சகம், தீயினாலும் ஆயுதங்களாலும் ஆபத்து இவைகளைக் குறிக்கும் இவ்வெண் விரும்பத்தக்கதல்ல.

எம் நாட்டின் முன்னைய பெயர் CEYLON என இருந்தது. CEYLON என்பதை எண் சோதிட ரீதியாக கணக்கிட்டுப் பார்த்தால் CEYLON 351375=24 என்னும் எண் வருகின்றது. இது ஓர் அதிர்ஷ்ட எண் ஆகும்.

COLOMBO என்பதைக் கணக்கிட்டுப் பார்த்தால் COLOMBO -37 37427=33 என்னும் எண் வருகின்றது. இது குபேரனின் எண். குபேரன் பணத்துக்கு அதிபதி. இந்த எண்ணும் ஓர் அதிர்ஷ்ட எண். ANURA-THAPURA என்பதைக் கணக்கிட்டுப் பார்த்தால் ANURATHAPURA 1562 14518621=42 என்னும் எண் வருகின்றது.

JAFFNA என்பதை கணக்கிட்டுப் பார்த்தால் JAFFNA 118851=24 என்னும் எண் வருகின்றது. இந்த எல்லா எண்களும் 6 இனத்தைச் சார்ந்தவையாக இருக்கின்றன. '6' என்னும் எண் சுக்கிரனின் எண் ஆகும். சுக்கிரன் என்பதைப் பணத்திற்குத் தான் குறிப்பிடுவார்கள். CEYLON, CO-LOMBO, ANURATHAPURA, JAFFNA என்பன ஒன்றுக்கொன்று பொருத்தமாய் இருந்த காலத்தில் நாட்டில் அமைதி தவழ்ந்தது. பொருளாதாரம் மிகுந்தது. ஆனால் CEYLON என்னும் பெயர் என்று SRILANKA என மாற்றப்பட்டதோ அன்று முதல் அழிவுகளும், அனர்த்தங்களுமே தொடர்கதையாகி வருகிறன. எனவே இலங்கையின் பெயரை மீண்டும் CEYLON என மாற்றி பயன்படுத்த வேண்டும் என்பது எனது கருத்தாகும். அழிவுகளும் அனர்த்தங்களும் உச்சக்கட்டத்தை அடைந்துள்ள இன்றைய நிலையில் இதனை மீண்டும் ஒரு முறை சிந்திக்கவேண்டியுள்ளது.

இந்தியாவில் பம்பாய் நகரின் பெயரை மும்பாய் என்று மாற்றி இருக்கிறார்கள். மற்றாஸ் என்பதை சென்னை என்று மாற்றியுள்ளனர். ஏன் SRILANKA என்பதை மீண்டும் CEYLON என மாற்றக் கூடாது? TAIWAN (தைய்வான்) நாட்டை எடுத்துக் கொள்ளுங்கள். எணகளின் அடிப்படையில் அதற்கும் SRILANKA கூட்டுத்தொகையே வருகின்றது.

## போரும் அழிவுகளும் தொடர பெயர்ப் பொருத்தமின்மையே காரணம்

தாய்வானுக்கும் சீனாவுக்கும் இடையே யுத்த முறுகல் நிலை இன்றும் நீடிப்பதற்கு இந்தப் பெயர் பொருத்தமின்மையே காரணம். தைய்வானில் அண்மையில் இயற்கை அழிவு (பூகம்பம்) ஏற்பட்டதை யாவரும் அறிவீர்கள். தைய்வானுக்கு முன்பு (போமாசா) FORMOSA என்ற பெயரே இருந்தது. அப் பெயர் எப்பொழுது TAIWAN என மாற்றப்பட்டதோ அன்று முதல் தாய்வானில் யுத்த முறுகல்களும் இயற்கை அனர்த்தங்களும் ஆரம்பித்துவிட்டன. '18' என்ற எண் ஓர் அதிர்ஷ்டமற்ற எண் என்பது இதிலிருந்து புரிகிறது.

SRILANKA என்ற பெயரை CEY-LON என்று மாற்ற முடியாவிட்டால் SRI LANKA என்பதைச் சில எழுத்துக்களைச் சேர்த்து SHIRI LANKA என மாற்றிப் பயன்படுத்த வேண்டும். SHIRILANKA என்பதை கணக்கிட்டுப் பார்த்தால் SHIRI LANKA - 3512131521= 24 என்னும் எண் வரும். மீண்டும் CEYLONனின் கூட்டுத்தொகையும் SHIRILANKA வின் கூட்டுத்தொகையும் 24 ஆக வந்துள்ளது. இம் மாற்றத்தை உலக வரைபட முதல், அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சகல நிறுவனங்கள் உட்பட எல்லா இடங்களிலும் - எங்கு SRILANKA என்று எழுதப்பட்டிருக்கிறதோ அங்கு எல்லாம் - SHIRI-LANKA என்று மாற்றபட வேண்டும். எல்லோரையும் இப்படி எழுதக் கூடியதாக இதை நடைமுறைப்படுத்த வேண்டும். பாடசாலை முதல் பல் கலைக்கழகம் வரையும் இதை எழுதத் தூண்டுதல் வேண்டும். வெளி நாடுகளிலும் இப்படி எழுதக் கூடியதாக நடைமுறைப்படுத்த வேண்டும். எங்கு எங்கு விளம்பரப்பலகைகளில் SRILANKA என்று எழுதப்பட்டிருக்கின்றதோ அதை எல்லாம் SHIRI LANKA என்று மாற்ற வேண்டும். தபால் முத்திரைகள் ஏனைய எல்லாவற்றிலும் SHIRILANKA என்று பொறிக்கப்பட வேண்டும். எல்லோரும் இவ்வாறு எழுதுவதன் மூலம் நாட்டில் நிச்சயமாக அமைதியும், சுபீட்சமும், எல்லா உயர்ச்சிகளும், பொருளாதார வளர்ச்சிகளும்கிடைக்கும். பெரும் செல்வந்த நாடாக மாறும். இதில் ஐயம் இல்லை. உதாரணத்திற்கு எங்களின் ARILANKA வை SHIRILANKA AIR LINE என மாற்ற வேண்டும்.

### அமெரிக்காவின் புகழ்

அமெரிக்காவை எடுத்துக் கொள்ளுங்கள். AMERICA என்பதை எண் சோதிட ரீதியாகக் கணக்கிட்டுப் பார்த்தால் '17' வருகிறன்றது. 8, 17, 26, 35, 44, 53, 62, 71, 80, 88 —— இந்த வரிசையில் மிகவும் அதிஷ்டமான எண்ணாகக் கருதப் படுவது '17' ஆகும். முது பெரும் அரசியல் தலைவர்கள் கூட இந்த எண்ணில் பிறந்தவர்களே ஆவர். இந்த எண்ணின் ஆதிக்கத்தை அசைக்கவோ, அழிக்கவோ முடியாது. இன்று உலகின் மிகப் பெரிய வல்லரசாக - முதன்மை நாடாக - அமெரிக்கா விளங்குகின்றது. அத்துடன் அமெரிக்காவிற்கு மற்றும் ஓர் அதிர்ஷ்டம் உண்டு. AMERICA என எழுதும் போது அது 'A' ல் தொடங்கி 'A'ல் முடிகின்றது. இது ஒரு பெரும் அதிர்ஷ்டம் ஆகும். தொடக்கத்திலும் முடிவிலும் இது போல் ஒரே எழுத்தைக் கொண்ட தனி நபர்களும், நாடுகளும், நிறுவனங்களும் சிறந்து வளர்ந்து உயர்ந்து நிற்பதைக் காணலாம். அத்தோடு இதில் இன்னும் ஒரு புதுமை என்னவென்றால் AM-RICA என்பதில் உள்ள உயிர் எழுத்துக்களின் கூட்டுத்தொகை கூட '8' எனறே வருகின்றது.

✸ AMERICA உயிர் எழுத்துக்கள் AEIA - 1 5 1 1=8

எல்லாமே '8' என வருகின்றது. அது பெரிய அதிர்ஷ்டம் ஆகும். இப்படிப் பல உதாரணங்களைக் கூறிக் கொண்டே போகலாம். இன்று பலரும் தங்கள் வாழ்வை வளமாகப் பெயரை அதிர்ஷ்ட எண்களின் படி மாற்றுகிறார்கள். எல்லாவற்றுக்கும் அதிர்ஷ்டத்திகதி, அதிர்ஷ்ட நாள் பார்த்து நடக்கிறார்கள். ஏன் அரசை (நடாளுமன்றத்தை) தொடங்கும் பொழுதும், கலைக்கும் பொழுதும் கூட பொருத்தமான, அதிர்ஷ்டமான திகதிகளிலேயே செய்கிறார்கள். அதேபோல எமது நாட்டின் பெயரிலும் மாற்றம் வேண்டும். அதிர்ஷ்டமான மாற்றம் வேண்டும். யுத்தத்தின் பிடியில் சிக்கியுள்ள இந்த நாட்டிற்கு இதன் மூலமாவது விடிவு கிடைக்கும் என்பது எனது கருத்தாகும் நாட்டு மக்களும், அரசாங்கமும் இதனை கவனத்தில் கொள்ளவேண்டும். ❒



நெடுந்தீவு பிரதேச சபையினால் அமைக்கப்பட்ட 'விருந்தினர் விடுதி' அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. திறப்பு விழாவை ஈ.பீ.டி.பியின் தீவக உதவி அமைப்பாளர் நெப்போலியன் 'மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பதை படத்தில் காணலாம். அருகே பிரதேசசபைத் தலைவர் புலவர் ஏ.டபிள்யூ.அரியநாயகம், பிரதேசசபைச் செயலாளர் எஸ்.தில்லைநாதன், நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத் தலைவர் நா.சங்கரப்பிள்ளை, வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் ஆகியோர் காணப்படுகின்றனர். (ஐ-7)

## பாடப் புத்தகங்களுக்குத்.....

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

இதன் காரணமாக அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த இளம் வயதினர், கட்டுப்பாடின்றி, தத்தம் வழியைத் தாமே பார்த்துக் கொள்ளும் கட்டாய சூழ்நிலைக்குப் பழக்கப்படுத்தப்படுகின்றனர்.

ஆனால் இவர்களில் வெகுசிலரே தவறான வழிகளில் செல்லாது தப்பித்துக் கொள்கின்றனர்.

ஆனால் பெரும்பாலானவர்கள் மது மற்றும் போதைப் பொருள்களை உபயோகித்து, நாளடைவில் அவற்றுக்கு அடிமையாகி, தமது வாழ்க்கையை தாமே அழித்துக் கொள்கின்றனர்.

### சமூகச் சீரழிவுகள்

இன்று மதுபாவனை, புகைத்தல் போன்ற பல்வேறு சமூக, கலாசார, பொருளாதார, சுகாதார சீரழிவுகளை ஏற்படுத்தும் பொருள்களின் ஊடுருவலால் எமது எமது இளம் சமுதாயம சீரழிக்கப்படுகிறது. மருத்துவமனைக்கு வரும் நோயாளர்களில் பெரும்பாலானவர்கள் மதுபாவனையால் ஏற்படும் வீதிவிபத்துக்கள், தெருச்சண்டை, உளவியல் பிரச்சினைகள், துர்நடத்தை, குடும்பப்பிளவுகள் மற்றும் குற்றச செயல்கள் என்பவற்றினாலேயே பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இன்று காணப்படும் இத்தகைய சூழ்நிலையைக் கட்டுப்படுத்தும் முகமாக யாழ்.பல்கலைக்கழகச் சமூகம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. அவற்றில் ஓர் அங்கமாக இத்துறையுடன் சம்பந்தப்பட்ட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த துணைவேந்தர், நீதிபதிகள், அரசாங்கஅதிபர், உதவிஅரசாங்க அதிபர்கள், மருத்துவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மதுவரித்திணைக்களம், மதகுருமார், பத்திரிகையாளர்கள், சமூகவியலாளர்கள், மாணவப்பிரதிநிதிகள், ஆகியோரையும் அரசசார்பற்ற நிறுவனங்கள், தொண்டர் நிறுவனங்கள் போன்றவற்றையும் உள்ளடக்கிய ஒரு சமுதாய விழிப்புணர்வு ஆலோசனைக்குழுவை அமைத்துள்ளது. யாழ்பல்கலைக்கழகச் சமூகம் மேற்கொண்டுள்ள இம்முயற்சிக்கு அனைவரும் தமது உழைப்பையும், பங்களிப்பையும் வழங்க வேண்டியது தலையாய கடமையாகும்.

இல்லாவிட்டால் மது மற்றும் போதைப் பொருள்களின் பாவனையால் எதிர்கால சமுதாயம் சீரழிய நாமே காரணமானவர்களாவோம். ✸

### ஆய்வு தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே10

வடபகுதிக்கடல் வளங்கள் குறித்த ஆய்வு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் மீன்பிடியியல் டிப்ளோமா பட்டதாரிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ம-10)

### மாமிக்கு ஏற்பட்ட கதி

தென்மராட்சி,மே10

மதுபோதையில் வந்த மருமகனைக் கண்டிக்க முயன்ற மாமி பாத்திரமொன்றினால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த சம்பவம் அண்மையில் கரவெட்டி வடக்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் சரஸ்வதி (வயது 74) என்ற அந்தப்பெண் தலையில் படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-117)


## நெஞ்சை விட்டகலா நினைந்துருகும் 31ஆவது நினைவுநாள்

மண்மகிழ 01 - 03 - 1971



கண்நெகிழ 10 - 04 - 2001

அமரர்

**சின்னையா நித்தியானந்தம்**

(யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட 3ஆம் வருட பௌதிகவியல் சிறப்புப்பிரிவு மாணவன்)

திங்களொன்று கண்ணிமைக்குமுன் ஓடிக்கரைந்ததுவோ?
அண்ணா நித்தி! எங்கே அண்ணா போனாய்? - ஆனந்தப்
பூங்காற்றை நுகரவேண்டிய காலமதில் அனலாய் மாறியோ சென்றாய்?
கல்விக் கழகத்திலே குதித்து நீயும் காவியங்கள் படைந்து வந்தாய்!
உன் மூன்றாண்டு உயர் கல்வித் துறைதனில் சிறப்புத்துறைதனை
ஓராண்டில் முடித்துவிட ஏனையா மறுத்தாயோ? - கற்பதில்
நீ புலியானாய்! எமக்குக் கற்பிக்க நீ மறந்தாயோ? மறுத்தாயோ?
ஏழு குயில்கள் கொஞ்சிக்குலாவின இப்போது ஒரு குயிலிசை
இல்லையையா! கூடு கலைந்ததையா! குயில்கள் பறந்ததையா!
பௌதிகம் கற்றாயே பகுத்து நீயும் - புதுமைமிகு பசுபதியாய் நித்தியண்ணா
இப்போ யாரை அண்ணா நித்தி அண்ணா என்போம் - எம் கண்முன்னே
உன் நினைவுகள் தான் - மறக்கமுடியவில்லையடா நித்தியண்ணா!
மூ பத்து ஆண்டுடனே பறந்தாயோ? உன் முகம் மலர்ந்த காட்சிதனைக்
காண நாமும் வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தோம் - உற்ற
நண்பர்கள் கண்ணீர் சிந்த உனை வழிநடத்திய ஆசான்கள்
மலைத்து நிற்க நடுவழியே விடைகொடுத்துச் சென்றுவிட்டாயே!
எமது இதயக் காணிக்கைகளை உன்பாதம் சமர்ப்பணமாக்குகிறோம்.!

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

*யாழ்ப்பாணம்.* (87454)

விடுதி நண்பர்கள்
(Room mates)

# கசிப்பு உற்பத்தி, விற்பனையைத் தடுக்க கிராம மட்டங்களில் விழிப்புக் குழுக்கள்

## அமைக்கப்பட வேண்டும் என்கிறார் யாழ். நீதிவான்

சட்ட விரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையைத் தடுப்பதற்கு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா கேட்டிருக்கின்றார்.

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினால் சட்ட விரோத மதுபான உற்பத்தி, விற்பனைக்கு எதிராகக் கூட்டப்பட்ட மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் யாழ்.பல்கலைக்கழகத்தில நடைபெற்ற இம்மாநாட்டில் அவா மேலும் கூறியதாவது:-

சட்ட விரோதமாக மதுபான உற்பத்தி முற்றாக நிறுத்தப்பட வேண்டும். இதற்கு நிர்வாக ரீதியாக விழிப்புக குழுக்களை அமைத்து செயற்பட வேண்டும்.

கிராம மட்டத்தில் இயங்கிவருகின்ற சன சமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மூலம் இந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டு கிராம அலுவலர்களின் மேற்பார்வையில் அவர்களின் நேரடிக் கண்காணிப்புடன் இந்தக் குழுக்களை இயங்க வைக்க வேண்டும்.

பிரதேச செயலர்கள் கிராம அலுவலர்களுக்கு இது தொடர்பான பணிப்புரைகளை வழங்க வேண்டும்.

இந்த விழிப்புக் குழுக்களுக்கு மேலதிகமாக மாவட்ட மட்டத்தில் உயர்மட்டக் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு செயற்படுவதன் மூலம் இந்த சட்ட விரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முடியும்.

இநத நடவடிக்கைகளுக்கு யாழ். மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களின் ஒத்துழைப்புத் தாராளமாகக் கிடைக்கும்.

இத்தகைய கண்காணிப்புக் குழுக்கள் மற்றும் விழிப்புக் குழுக்களின் செயற்பாடுகளுக்கு படையினரும் பொலீஸாரும் ஒத்துழைப்பு வழங்குவார்கள். வடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திராவுடன் இந்த விடயம் தொடர்பாக நாம் உரையாடிய போது இந்த சட்ட விரோத செயற்பாட்டினைக் கட்டுப்படுத்துவதற்குப் படைத்தரப்பு பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்று தெரிவித்துள்ளார்.

நீதிமன்றம் அழைப்பாணை விடுக்கும் எவரும் நீதிமன்றுக்கு வந்தே ஆக வேண்டும். அத்துடன் நீதிமன்றக் கட்டளையை எந்த உயர்பதவியில் இருப்பவரும் செயற்படுத்த வேண்டும். அவ்வாறு செயற்படாது விட்டால் சட்டம் தனது கடமையைச் செய்யும்.

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தி வீதியில் மாலை நேரங்களில் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் கூடி நிற்கின்றனர். வீதிகளில் சைக்கிள்களையும் நிறுத்தி வைக்கின்றனர். இதனால் அந்த வீதியில் போக்குவரத்துச் செய்பவர்களுக்கு இடையூறுகள் ஏற்படுகின்றன. எனவே இந்த விடயத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் கவனம் எடுத்துச் செயற்பட வேண்டும். பல்கலைக்கழக மாணவர்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் ஏனையோருக்கு முன் மாதிரியாகச் செயற்பட வேண்டும் - என்றும் அவர் கூறினார்.

### மு.திருநாவுக்கரசு

முன்னாள் மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு அங்கு உரையாற்றும் போது கூறியதாவது:-

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடுமையான தண்டப் பணத்தை அறவிடுவதன் மூலம் இதனைக் கட்டுப்படுத்த முடியாது. இந்த நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் பலரைச் சந்தித்து அவர்களுடன் நான் உரையாடியுள்ளேன். வறுமை நிலையினாலும், வசதிகளற்ற நிலையினாலுமே இந்த சட்ட விரோத செயலில் பலர் ஈடுபடுகிறார்கள்.

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண் ஒருவர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு அவருக்கு அதிக தண்டம் விதிக்கப்படுகிறது. ஒரு காலை இழந்த கணவனையும், ஊனமுடைந்துள்ள தனது பிள்ளையையும் குடும்பத்தையும் காப்பதற்காக அவள் இநதத் தொழிலைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

அவளுக்குக் கடுமையான தண்டம விதிக்கின்ற போது அவள் அந்தத் தண்டப்பணத்தைச் செலுத்துவதற்காக தனது உடலை விற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றாள். எனவே தண்டம் விதிப்பதனால் மேலும் சமூகச் சீரழிவுகளை ஏற்படுத்த வேண்டிய நிலை உருவாகும்.

### மறுவாழ்வு வேண்டும்

ஒரு வட்டத்துக்குள் இருப்பவர்களே கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபடுகின்றார்கள். இவர்களை அடையாளம் கண்டு இவர்களுக்கு மாற்றுத் தொழில் வசதிகள் வழங்கி மறுவாழ்வு அளிப்பதன் மூலமே இதனைக் கட்டுப்படுத்த முடியும் - என்றார்.

மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் உரையாற்றும் போது கூறியதாவது:-

பிரதேச செயலர் மட்டத்தில் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, மாவட்ட மட்டத்திலும் அவ்வாறு அமைத்து கசிப்பு உற்பத்தி, விற்பனையைக் கட்டுப்படுத்த நடவடிக்கையை மேற்கொள்வோம்.

கிராமங்களிலுள்ள கசிப்பு உற்பத்தியாளர்களை அங்குள்ள கிராம அலுவலர்களுக்குத் தெரிந்திருப்பதால் அவர்களை அணுகி அத்தொழிலைக் கட்டுப்படுத்த முடியும்.

இராணுவ, பொலீஸ், மதுவரித் திணைக்கள அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இதனைச் செயற்படுத்த முடியும் - என்றும் கூறினார்.

இந்த மாநாட்டில் மல்லாக மாவட்ட நீதிவான் பா.சுப்பிரமணியம், சாவகச்சேரி நீதிவான் அ.பிறேம்சங்கர் ஆகியோா உட்பட பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம், மதுவரித் திணைக்களம், பிரதேச செயலகம் போன்றவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ஐ-5-6)

# சட்ட விரோத மதுபான நிலையங்களை மூடிவிட நீதிமன்றங்களின் ஒத்துழைப்பு

## யாழ்.பல்கலைக்கழகச் சமூகம் கோருகின்றது

யாழ்ப்பாணம்,மே 10

குடாநாட்டில் சட்டவிரோதமாக இயங்கும் மதுபான விற்பனை நிலையங்களுக்கு எதிராகத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மேற்கண்டவாறு யாழ்.பல்கலைக் கழக சமூகம் யாழ்.மாவட்டத்தில் செயற்படும் நீதிவான்களிடம் கோரியுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் நடந்த மாநாட்டில் பங்குபற்றிய நீதிவான்களிடம் கையளித்த மகஜரிலேயே மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டில் மதுப்பாவனை கடந்த காலத்தில் இருந்ததை விட மிகப் பெரியளவில் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக மக்களின் சமூக, பொருளாதார, கலாசார நிலை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. யாழ்.பல்கலைக்கழக சமூகம் இந்தப் பிரச்சினையை எதிர்நோக்கி நிற்கிறது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டிய கட்டாய தேவை இன்றுள்ளது.

குடாநாட்டில் சனத்தொகைக்கு ஏற்ப, 21 சில்லறைக் கடைகளுக்கும் ஆறு ஹோட்டல்களுக்கும் இரண்டு விடுதிகளுக்கும் மட்டுமே லைசன்ஸ் வழங்கமுடியும். எனினும் குடாநாட்டில் இந்த எண்ணிக்கைக்கு மேலாகப் பெரும் எண்ணிக்கையில் மது விற்பனை நிலையங்கள் செயற்படுகின்றன. யாழ்.பல்கலைக்கழக சுற்றாடலிலேயே, 16 மதுவிற்பனை நிலையங்கள் இயங்குகின்றன.

பாடசாலைகள், ஆலயங்கள், ஆஸ்பத்திரி, பொது நூலகங்கள் ஆகியவற்றுக்கு சமீபமாகக் கூட மது விற்பனை நிலையங்கள் இயங்குவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அவை இயங்குவதற்குச் சட்டப்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஒரு பிரதேச மக்களின் சனத்தொகைக்கு ஏற்பவே மதுபான நிலையம் இயங்க வேண்டும் என்று கலால் சட்டங்கள் கூறுகின்றன. அதாவது நகரசபைப் பிரதேசத்தில் 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் பொது மக்களுக்கு ஒரு மதுபான நிலையமே திறக்க அனுமதி வழங்க வேண்டும். கிராமப்புறத்தில் இரண்டு கிலோ மீற்றர் சுற்றாடலுக்கு ஒரு நிலையமே இயங்க முடியும்.

இந்த விடயங்களைக் கவனத்தில் எடுத்து, சட்ட விரோதமாகச் செயற்படும் மதுபான நிலையங்களுக்கு எதிராகத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் படி பல்கலைக்கழக சமூகத்தின் சார்பில் கோருகின்றோம் - என்றுள்ளது. (ஐ-3)

# டிராக்டர், பவுஸர் வாங்குவதற்கு போதிய நிதிவளம் இல்லை

## வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவர் கவலை

சண்டிலிப்பாய்,மே 10

வலி. வடக்குப் பிரதேச சபைக்கு குப்பை கூழங்களை அகற்றுவதற்காக உழவு இயந்திரமும் குடி தண்ணீர் வழங்குவதற்கு பவுஸரும் அவசியம் தேவைப்படுகின்றன.. பிரதேச சபையிடம் நிதிவளம் இல்லாமல் இருப்பதால் இவற்றைக் கொள்வனவு செய்ய முடியவில்லை.

இவ்வாறு பிரதேச சபைத் தலைவர் திருமதி பாலம்பிகை ஸ்ரீ பாஸ்கரன் கவலை தெரிவித்தார்.

இவ்வருடம் பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின் கீழ் சபைக்கு ஐந்து லட்சம் ரூபா மட்டுமே கிடைத்துள்ளதாகவும், சிறு வீதிகளைத் திருத்துவதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-135)

# இளைஞர்களின் சேஷ்டைகளை தடுக்கப் பொலீஸார் ரோந்து

தென்மராட்சி,மே10

மாணவிகள் மீதான இளைஞர் கோஷ்டியினரின் சேஷ்டைகளைத் தடுக்க நெல்லியடிப் பொலீஸார் ரோந்து நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

மாணவிகள் மீது இளைஞர்கள் சேஷ்டை விடுவதைக் கண்டித்து பெற்றோரால் மகஜர் வழங்கப்பட்டதையடுத்தே நெல்லியடிப் பொலீஸார் தீவிர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

நெல்லியடிச் சந்தி, வதிரிச் சந்தி, மாலு சந்தி, கோவில் சந்தை, கரணவாய் ஆகிய இடங்களில் பொலீஸார் நிறுத்தப்பட்டுள்ளனர். இவற்றை விட தனியார் கல்வி நிலையங்களில் வகுப்புகள் முடிந்து மாணவிகள் வெளியேறும் வேளைகளில் வாகனங்களில் பொலீஸார் ரோந்துப் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

மாணவர்கள், இளைஞர்கள் ஆகியோர் வீதிகளில், சந்திகளில் கூட்டமாக நிற்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு நெல்லியடிப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.ஏ.தகம்பத் கேட்டிருக்கிறார். (ஐ-117)

### கோப்பாயில் சாயி சிறுவர் இல்லம் திறப்பு

கோப்பாய்,மே10

கோப்பாய் வெள்ளெருவை பிள்ளையார் கோயிலுக்கு அருகே உள்ள அதிகார் வீதியில் சாயி சிறுவர் இல்லம் கடந்த ஞாயிறு திறந்து வைக்கப்பட்டது.

ஐந்துக்கும் 12வயதுக்கும் இடைபட்ட மிகவும் வசதிகுறைந்த ஆண் பிள்ளைகளே இங்கு வைத்துப் பராமரிக்கப்படுகிறார்கள். தாய், தந்தை அற்றவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

அவர்களுக்கு பாடசாலைக் கல்வி வழங்கப்படுவதோடு வேறு கலை அம்சங்களும் கற்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறுவர் இல்லத்தில் தற்போது 13 சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். (க-72)

# தாயகம் திறப்பு விழாவில்.....

திக்கற்ற சிறார்களுக்குப் புகலிடம் தரும் 'தாயகம்' நலவாழ்வு இல்லம் கடந்த சித்திரா பௌர்ணமி தினத்தன்று திறந்து வைக்கப்பட்டது. அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை:-



நிகழ்வில் கலந்து கொண்ட நல்லை குருமகா சந்நிதானம் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், மல்லாகம் நீதிபதி பா.சுப்பிரமணியம், யாழ்ப்பாண நீதிபதி இ.த.விக்னராஜா, மேலதிக மாவட்டக் காணிப் பதிவாளர் ந.சதாசிவ ஐயர், அலங்கார் நகைக் கடை உரிமையாளர் பொ.குகனேசலிங்கம், ஓய்வுபெற்ற நீதிவான் மு.திருநாவுக்கரசு யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், மல்லாகம் பதில் நீதிபதி க.அரியநாயகம் ஆகியோர் காணப்படுகின்றனர்.



முதல் நாளில் சேர்க்கப்பட்ட முப்பது சிறார்களில் ஒரு பகுதியினருடன் 'தாயகம்' அமைப்பாளர் ஸ்ரீதரன் மற்றும் நிர்வாகக் குழுவினர்.



தமது 'தாயகம்' இல்லத்தின் படுக்கை அறையில் ஓய்வுபெறும் சிறார்களில் சிலர்.

# வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட 131 ரயில்வே ஊழியர் இடைநிறுத்தம்

கொழும்பு,மே9

வெசாக்தின கொண்டாட்டங்களுக்காக சம்பள முற்பணம் வழங்கக்கோரி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட 131 ரயில்வே ஊழியர்கள் பதவியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

ரயில் சேவைகளைப் பாதிப்படைய செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இவர்கள் கடந்த வாரம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

அண்மையில் அரசாங்கம் ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவித்ததைத் தொடர்ந்து வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 131 ஊழியர்களும் வேலையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### நாய்களுக்கு ஊசி மருந்துகள்

நாய்களுக்கு உரிய **PARVO DISTEMPER** மருந்துகள் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்றர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (87587)

### மதங்களின் சின்னங்கள்

மதங்களின் சின்னங்களைச் சித்திரமாக வரைந்து தருபவருக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும். விவரங்களுக்கு :- **C.M.S.NATHAN, LUCKY MAHAL, MAIN STREET, ELAVALAI.** (87570)

### அபூர்வ ஜோதிடம்

வடநாட்டுச் சித்த மருத்துவ முறையில் தீராத நோய்களைக் காலதாமதமின்றி மாற்றுதல், காண்ட முறையில் பலன் அறிதல். சனி, ஞாயிறு 8.30 - 5 p.m. ஆடியபாத வீதி, சரஸ்வதி மில்லேன், கொக்குவில் கிழக்கு. (87583)

### S.L.Ac.S.

மேற்படி பரீட்சைக்கான கணக்காய்வும், நுண்ணாய்வும் நூல் வெளிவந்துவிட்டது. ஆசிரியர்: இ.இரட்ணம், சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம். பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். (87553)

### விற்பனைக்கு

**LISTER ENGLAND BRAND NEW 3 PHASE ORIGINAL 9.8 K.V.S. GENERATORS** விற்பனைக்குண்டு. தொடர்பு:- K.முத்துக்குமார், 75/10, முன் ஒழுங்கை, பலாலி வீதி, திருநெல்வேலி. **PHONE 3376.** (87564)

**CD 125 Honda** மோட்டார் சைக்கிள் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு:- M.ஜெகதீஸ்வரன், புலோலி மேற்கு (பெற்றோல் விற்பனை நிலையத்துக்குப் பின்னால்) (87585)

### மணமகன் தேவை

இந்து உயர் குடும்பத்தைச் சேர்ந்த, செவ்வாய்க் குற்றமற்ற, **4'9"** உயரமுள்ள, அழகிய நற்குணமுள்ள, 1959இல் பிறந்த, கேட்டை முதலாம் பாதம், லிகிதர் பெண்ணுக்கு வெளிநாட்டிலிருந்து வந்திருக்கும் மாமனார், பொருத்தமான, நற்குணமுள்ள மணமகனை எதிர்பார்க்கின்றார். தொடர்பு:- விளம்பர இல.1282, **C/o** உதயன், யாழ்ப்பாணம். சகல விவரத்துடன் 15.05.2001 இற்கு முன் தொடர்புகொள்ளவும். (87562)

### சங்கீதம்

செல்வி கி.மயில்வாகனம் எழுதிய **G.C.E.(O/L)** கர்நாடக சங்கீதம் வெளிவந்து விட்டது. 2001 பாடத்திட்டத்துக்கேற்றவாறு அறிமுறை, செய்முறை விடயங்களுடன் கடந்த 5 வருடப் பரீட்சை விளக்கங்களும், விடைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. தரம் 10 சங்கீதப் புத்தகமும் விற்பனையாகின்றது. வ.இ.ச.சபைப் பரீட்சைக்கு ஏற்ற பல விடயங்கள் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன. பிரபல புத்தகசாலைகளில் விற்பனையாகின்றது.(87589)

### வந்துவிட்டன

கொழும்பில் இருந்து கிறிஸ்தவ புத்தகங்கள், போஸ்டர்கள், கசற்பீஸ் வகை, கீடீக் வகை, ஸ்டிக்கர் வகை என்பன வந்துவிட்டன. கிடைக்கும் இடம்:- **C.L.S.** இல.**306A**, வைத்திய சாலை வீதி, யாழ்ப்பாணம். (87592)

### தவறிவிட்டது

கைதடியைச் சேர்ந்த S.R.மயிலவாகனம் என்பவரது விசேட அடிட்டையும், சாரதி அனுமதிப் பத்திரமும் உடுப்பிட்டிச் சந்திக்கும் உடுப்பிட்டி யூனியனுக்கும் அருகிலே உள்ள வீதியில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உடுப்பிட்டி யூனியனுக்கு முன்னிருக்கும் பொள்ளா வில்லா வீட்டில் ஒப்படைத்துதவவும். (87590)

அல்வாய் தெற்கைச் சேர்ந்த கந்தையா பாக்கியநாதன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.500490519V), விசேட அடையாள அட்டை (இல.0906001618) என்பன 4.5.2001 அன்று திருநெல்வேலிக்கும் புன்னாலைக்கட்டுவனுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ்ப்பாணம் தொழில் நுட்பக்கல்லூரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (87600)

### கார் விற்பனைக்கு

**EN. 6571**, இலக்கமுடைய ஒஸ்ரின் கேம்பிரிட்ஜ் கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- **S.**அன்ரன்லால், 'தம்பளை', அளவெட்டி மேற்கு. (87593)

நல்ல நிலையிலுள்ள மொறிஸ் மைனர் கார் (10ஸ்ரீ) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- ந.பாலவிநாயகர், இல 173, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். **T.P.No.** 2448. (87594)

### திருத்துதல்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், சகல கமரா வகைகளும், எலக்ரோனிக் பிளாஸ்கன் இதர பிளாஸ்டிக்கால் ஆன கை அடக்க அளவு கொண்ட வாட்டர்பம் ஜெனரேற்றர் போன்ற வைக்குரியன ஒட்டியும் திருத்தியும் கொடுக்கப்படும். தொடர்பு: சு.நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி, (மேல்மாடி, கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில்) (87536)

சகல விதமான தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: **R.**மருதம், 66, மணிக்கூட்டு வீதி (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம். (887453)

---

## 'துர்க்கா பத்தி' பாவனையாளர்களின் கவனத்துக்கு

"துர்க்கா" என்னும் பெயரில் போலி ஊதுபத்திகள் விற்பனையாகிவருவதாகத் தெரியவந்துள்ளது. எனவே பாவனையாளர்கள் "துர்க்கா பத்தி" வாங்கும்போது உண்மையான "துர்க்கா பத்தி"தானா? என்பதைக் கவனித்து வாங்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

வர்த்தகப் பெருமக்கள் எமது உற்பத்திப் பொருள்களை எமது விற்பனை வாகனங்களிலும் எமது விற்பனை நிலையங்களிலும் எமது முகவர் விற்பனை நிலையங்களிலும் கொள்வனவு செய்து போலி உற்பத்திகள் விற்பனையைத் தவிர்ப்பதில் உதவும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

(C/16640) *அண்ணா தொழிலகம், இணுவில்.*

---

## பதினொராம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 25 - 09 - 1929 | 12 - 05 - 1990 |

### அமரர் செல்லத்துரை வரதலிங்கம்

(இளைப்பாறிய அதிபர், யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம், முன்னாள் யாழ். மாவட்ட சாரண ஆணையாளர்)

திதி: 10.05.2001

'பதினொரு ஆண்டுகள் ஓடி மறைந்திடினும் தொடரும் உங்கள் பசுமையான நினைவுகள்'

*117/4, அரசடி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினரும், சகோதரியும்.**

(87597)

---

## மரண அறிவித்தல்

### J.D. மத்தாயஸ்

**(RETIRED CHIEF ACCOUNTANT, COLOMBO PORT COMMISSION)**

J.D.மத்தாயஸ் (RETIRED CHIEF ACCOUNTANT, COLOMBO PORT COMMISSION) 07-05-2001 திங்கட்கிழமை கொழும்பில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் மல்லாகத்தைச் சேர்ந்த அமரர்களான யோண் டானியல் - அன்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், காங்கேசன்துறையைச் சேர்ந்த அருளம்மாவின் அன்புக் கணவரும், மரியதாஸன் (Sydney), கிறேஸ் (கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி முன்னாள் ஊழியர்), அருட்திரு.அன்ரன் மத்தாயஸ் (கிறிஸ்தவ, இஸ்லாமிய துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம், பங்குத்தந்தை புனித ஆசீர்வாதப்பர் ஆலயம், நல்லூர்), ஜோய், ரஞ்சன், நிர்மலா (LONDON), தர்ஷினி (Sydney) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், மெற்றில்டா (Sydney), அமரர் பெனடிக்ற் பாலன், மலர், பொலின், சந்திரன் (U.K), கிறிஸ்ரி (Sydney) ஆகியோரின் மாமனாரும், டேவிட் (Australia), நேசம்மா, காலஞ்சென்றவர்களான இராஜேந்திரம், ஞானம்மா, ஆசீர்வாதம், மோசேஸ், அருட்திரு.புறுனோ, O.S.B., எலிசபேத் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (10-05-2001) வியாழக்கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு முகத்துவாரம் புனித அந்திரேயர் ஆலயத்தில் நன்றிப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, மாதம்பிட்டிய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*134, ELIE HOUSE ROAD,*
*MUTUWAL*
*COLOMBO - 15*
*T.P.523747 / 526614*

தகவல்:
அருட்திரு.அன்ரன் மத்தாயஸ்

(87603)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கரவெட்டி ஸ்ரீ நாரத வித்தியாலய அதிபர்



### திரு.செ.கந்தசாமி அவர்கள்

இலங்கை அதிபர் சேவை தரம் I இற்குப் பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரது பணி மேலும் சிறந்து விளங்கி பல்லாண்டு காலம் சேவை செய்து பாரினில் வாழ வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/கரவெட்டி*
*ஸ்ரீ நாரத வித்தியாலயம்.*

-ஆசிரியர்கள், மாணவர்கள்.

(87586)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| மனம் மகிழ | மனம் நெகிழ |
|---|---|
| 23 - 01 - 1954 | 10 - 04 - 2001 |

### திருமதி செல்வராணி மும்மூர்த்தி

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கலட்டி அம்மன் வீதியை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி மும்மூர்த்தி அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும் இன்று (10.05.2001) வியாழக்கிழமை நடைபெறும். இந்த நிகழ்வுகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் வந்து கலந்து கொண்டு அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

*7ஆம் கட்டை,*
*சண்டிலிப்பாய்.*

(87598)

பிரிவால் துயருறும்:
கணவன்:**மும்மூர்த்தி**
*(வயரிங் மூர்த்தி)*
மகள்: **கௌசிகா**

---

## நீங்கா நினைவில் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 30 - 08 - 1948 | 10 - 04 - 2001 |

### அமரர் கந்தையா செல்வநாயகம்

**குடும்பத்தின் குலவிளக்காய்**
**எமது வாழ்வில் ஒளி தந்து**
**பாசத்தின் உறைவிடமாய் விளங்கிய**
**பண்பான தலைவரே!**
**அணையாத ஜோதியாக எம் இதயங்களில்**
**வாழ்கிறது உம் நினைவு!**
**ஆண்டாண்டு காலம் சென்றாலும்**
**ஆறாது எம் துயரம்!**
**உங்கள் ஆத்மா ஆண்டவன் அடியில்**
**அமைதி பெற வேண்டுகிறோம்.**

எமது இல்லத்தில் இன்று (10.05.2001) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கடவைப்புலம்,*
*சுன்னாகம்.*

- குடும்பத்தினர்.

(87601)

### அடுத்த சட்டசபை ஆட்சி யாருக்கு?

# தமிழ் நாட்டில் இன்று தேர்தல்; வாக்காளரிடம் ஆர்வம் இல்லை!

தமிழக சட்டசபைத் தேர்தலின் வாக்குப் பதிவு இன்று நடைபெறுகிறது. வாக்களிப்புத் தொடர்பாகக் குழப்பம் மற்றும் விருப்பமின்மையுமே மக்களிடையே நிலவுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தி. மு. க. தலைமையிலான தேசிய ஜனநாயக் கூட்டணியும் அ. தி. மு. க. தலைமையிலான மதச் சார்பற்ற கூட்டணியும் எதிரெதிரே மோதுகின்றன. அத்துடன் ம. தி. மு. கவும் மூன்றாவது அணியாகக் களமிறங்கியுள்ளது.

கூட்டணிகளில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் எண்ணிக்கையும், அவற்றின் தன்மைகளும் மக்களை முடிவெடுக்க முடியாமல் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளதாக அந்தச் செய்திகள் கூறுகின்றன.

ஜெயலலிதாவின் வேட்பு மனுக்கள் நிராகரிப்பு, தேர்தலில் ஜாதிக் கட்சிகளின் ஆதிக்கம், கூட்டணிகளில் நிலவும் குழப்பங்கள், ம. தி. மு. க. தனித்துப் போட்டியிடுவது ஆகிய பல விடயங்களும் ஏற்படுத்திய குழப்பத்துடன் தமிழக மக்கள் இன்று

## ஊசி அரங்கம்

ஜனநாயகக் கடமையான வாக்களிப்பில் கலந்து கொள்கின்றனர்.

தற்போதைய நிலவரப்படி தேர்தல் முடிவு எந்தக் கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மை பெறாத ஒரு தொங்கு சட்டசபைக்கு வழி வகுக்கலாம் என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

(ஒ-6-9)

## மின்னணு இயந்திர வாக்குப்பதிவும் தமிழகத்தின் பாமர மக்களும்

தமிழகத்தில் இன்று நடைபெறும் தேர்தலில் முதல் முறையாக அனைத்துத் தொகுதிகளிலும் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன

புகைப்படம் எடுத்தால் தமது ஆயுள் குறைந்துவிடும் என்ற அச்சத்தால் வாக்காளர் அடையாள அட்டைக்கு புகைப்படம் எடுக்க மறுக்கும் பாமரத்தனமான வாக்காளர்களை அதிகம் கொண்ட தமிழகத்தில் மின்னணு வாக்குப் பதிவு எந்த அளவுக்கு வெற்றிகரமாகச் செயற்படும் என விமர்சகர்கள் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

அமெரிக்க அதிபர் தேர்தலின் முடிவை அறிவிப்பதில் ஏற்பட்ட இழுபறி நிலையைச் சுட்டிக்காட்டும் அவர்கள் தமிழகத் தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர், பல விமர்சனங்கள் எழ வாய்ப்புண்டு என்று எதிர்பார்க்கின்றனர்.

## தாமரைக்கனியை எதிர்த்து போட்டியிடுகிறார் மகன்

அ. தி. மு. கவிலிருந்து ஜெயலலிதாவால் வெளியேற்றப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் தாமரைக்கனியும் அவரது மகன் இன்பத்தமிழனும் ஒருவரையொருவர் எதிர்த்து இன்று நடைபெறும் தேர்தலில் ஸ்ரீ வில்லிப்புத்தூர்த் தொகுதியில் போட்டியிடுகின்றனர்.

கட்சி விரோத நடவடிக்கைக்காக அ. தி. மு. கவை விட்டு வெளியேற்றப்பட்ட தாமரைக்கனி சுயேச்சையாகப் போட்டியிடுகின்றார்.

அவரை எதிர்த்து. அவரது மகன் இன்பத்தமிழனை அ. தி. மு. க. வேட்பாளராக ஜெயலலிதா நிறுத்தியுள்ளார்.

இதே போன்று வீரபாண்டித் தொகுதியில், தி. மு க. அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்தை எதிர்த்து அவரது சகோதரரின் மகன் எஸ் பி. செல்வம் போட்டியிடுகிறார்.

### 'போபர்ஸ்' ஊழலில் சம்பந்தப்பட்ட

## இந்துஜா சகோதரர்களால் இந்திய அரசுக்குத் தர்மசங்கடம்

புதுடில்லி, மே 10

பிரிட்டிஷ் பிரதமர் டொனி பிளேயரைச் சந்திக்க இந்தியப் பிரதமர் வாஜ்பாயின் செயலர் சென்றபோது இந்துஜா சகோதரர்களும்உடன் சென்றதாகக் கூறப்படுவது மத்திய அரசுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

அணு ஆயுத சோதனைகள் குறித்த இந்தியாவின் நிலையை விளக்கும் கடிதத்தைப் பிரதமரின் முதன்மைச் செயலர் பிரிஜேஸ் மிஸ்ரா பிரிட்டிஷ்பிரதமரிடம் 1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நேரில் சந்தித்து கையளித்தார். இந்தச் சந்திப்புக்கு இந்துஜா சகோதரர்கள் ஏற்பாடு செய்து கலந்து கொண்டதாகக் கூறப்பட்டது.

'போபர்ஸ்' பீரங்கி பேர ஊழலில் இந்துஜா சகோதரர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ள நிலையில், அரசுக்கு தற்போது இக்கட்டான நிலை உருவாகியுள்ளது.

தேசிய நலனைக் கருதியே இந்துஜா சகோதரர்களின் உதவி அப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது.

(ஒ)

## யூகோஸ்லாவியாவுக்கு மீண்டும் உலக வங்கியில் அங்கத்துவம்

உலகவங்கியில் யூகோஸ்லாவியாவுக்கு மீண்டும் அங்கத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சீர்குலைந்துள்ள தனது பொருளாதார வளர்ச்சிக்காக உலகவங்கியில் கடன்களை பெறும் தகுதியை யூகோஸ்லாவியா மீண்டும் பெறுகிறது.

உலக வங்கியில் மீண்டும் அங்கத்துவம் பெறுவதற்கான திருப்திகரமான தராதரங்களை தற்போது யூகோஸ்லாவியா கொண்டிருப்பதாலேயே அதற்கு மீண்டும் அங்கத்துவம் வழங்கப்பட்டிருப்பதாக உலக வங்கிப் பணிப்பாளர் கிஸ்டியன் புல்வன் தெரிவித்தார்.

எதிர்காலத்தில், யூகோஸ்லாவியா பொருளாதார மேம்பாட்டுக்காகவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் உலக வங்கி ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அவர் கூறினார்.

அல்பேனியர் மீதான இன ஒழிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு,பால்கன்யுத்தத்தில் ஈடுபட்டதற்காக 1992 இல் சர்வதேச நாணய நிதியத்திலிருந்தும், 1993 இல் உலக வங்கியிலிருந்தும் யூகோஸ்லாவியா அங்கத்துவங்களை இழந்திருந்தது. கடந்த வருடம் அதிபர் பதவியிலிருந்து சொலபொடான் மிலோசெவிக் அகற்றப்பட்டதும், சர்வதேச நாணய நிதியத்தில் யூகோஸ்லாவியாவுக்கு அங்கத்துவம் வழங்கப்பட்டிருந்தது.

(ஒ-6-9)

## ஆய்வுக்குழு மீது தாக்குதல்; இருவர் பலி!

இஸ்லாமாபாத், மே 10

பாகிஸ்தானில் பெற்றோலிய ஆய்வில் ஈடுபட்டிருந்த சீனர்கள் அடங்கிய குழு ஒன்றின் மீது, இனம் தெரியாத சிலர் ரொக்கெட் தாக்குதல் நடத்தியதில் இருவர் கொல்லப்பட்டனர்

சீனப் பொறியியலாளர் ஒருவர் உட்பட 3 பேர் காயமடைந்தனர். (ஒ)

## மசிடோனியாவில் கூட்டரசு அமைய இணக்கம்

மசிடோனியாவின் பிரதான அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து தேசியக் கூட்டரசாங்கம் ஒன்றை ஏற்படுத்த இணங்கியுள்ளன.

அல்பேனியத் தீவிரவாதிகள் மற்றும் அல்பேனியர் சார்பான கட்சிகளின் நாட்டைப் பிரிக்கும் சதி முயற்சியை முறியடிக்கக் கூட்டரசாங்கம் அமைக்கவுள்ளதாக அரசு தரப்பு தெரிவித்துள்ளது.

## கராச்சியில் குண்டு வெடிப்பு; ஒருவர் பலி!

இஸ்லாமாபாத், மே 9

பாகிஸ்தானின் கராச்சி நகரில் இரு நாள்களின் முன்னர் இரவுமினி பஸ் ஒன்றில்குண்டு வெடித்ததில் ஒருவர் கொல்லப்பட்டார் ஐந்து பேர் காயமடைந்தனர்.

(ஐ ஒ)

## அமைச்சர் சென்ற ஹெலி விபத்தில் சிக்கியது

புதுடில்லி, மே 10

இந்தியாவின் அருணாசலம் பிரதேச மாநிலத்தின் கல்வி அமைச்சர் ஜே. ஆர். நாதும் உட்பட 7 பேர் பயணம் செய்த ஹெலி நேற்றுக் காலை விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

விபத்துக்குள்ளான ஹெலி அடர்ந்த காட்டுப்பகுதிக்குள் விழுந்துள்ளதாக நம்பப்படுவதால், மீட்புப்படைகள் அப்பகுதிக்கு விரைந்துள்ளன.

## புதுவையை 'புலிக் கோட்டை' ஆக்குகிறார் ராமதாஸ்

### சுப்பிரமணிய சுவாமி குற்றச்சாட்டு

புதுவை, மே 10

பாண்டிச்சேரியை விடுதலைப் புலிகளின் கோட்டையாக்க டாக்டர் ராமதாஸ் திட்டமிடுவதாக ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாண்டிச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அப்போது சுப்பிரமணிய சுவாமி கூறியதாவது—

பாண்டிச்சேரியை விடுதலைப் புலிகளின் கோட்டையாக்க பா. ம க. தலைவர் ராமதாஸும் ஜெயலலிதாவின் தோழியான சசிகலாவின் உறவினர் தினகரனும் இணைந்து திட்டம் தீட்டியுள்ளனர்.

இதற்காகவே ராமதாஸ் பா. ஜ. க. கூட்டணியிலிருந்து வெளியே வந்தார்.

பல்வேறுகட்சிகளில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாளர்கள் இருக்கிறார்கள். அதனால்தான் விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரனை நாடுகடத்த யாரும் கோருவதில்லை.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ)

## வீரப்பன் நடமாடும் பகுதியில் மேலதிகப் பாதுகாப்பு

சென்னை, மே 10

சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பனின் நடமாட்டம் உள்ள மச்சினகுடி, சிறியூர் உள்ளிட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடிகளுக்கு மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாநில பொலீஸின் தலைமை இயக்குநர் ஆர். ராஜகோபாலன் தெரிவித்துள்ளார்.

அங்கு பாதுகாப்புப் பணிகளில் சிறப்பு அதிரடிப் படையினர் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டம் பற்றி

## வட அட்லாண்டிக் நாடுகளுடன் அமெரிக்கா பேச்சுவார்த்தை

பிரஸெல்ஸ், மே 10

அமெரிக்காவின் ஏவுகணைப் பாதுகாப்புத்திட்டம் பற்றிய ஆலோசனைப் பேச்சுகள் நேற்று முன்தினம் பிரஸெல்ஸில் தொடங்கின.

அமெரிக்கத் தூதுக்குழுவினர், வட அட்லாண்டிக் குழு நாடுகளின் பிரதிநிதிகளிடம் திட்டம் குறித்து விளக்கினார்கள்.

'தற்காப்புக்காக மிரட்டல்' என்ற புதிய கோட்பாடு பற்றி நடைபெற்ற விவாதத்தின் போது எல்லா நேசநாடுகளினதும் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தரக் கடமைப்பட்டுள்ளதாக அமெரிக்கத் தரப்பில் கூறப்பட்டது.

அமெரிக்க அரசு, தன் மீதான ஏவுகணைத் தாக்குதல்களை முறியடிக்கும் வகையில், தாக்கியழிக்கும் திட்டம் ஒன்றை உருவாக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதும் —

இதற்கு சீனா உட்பட பல நாடுகள் ஆயுத சமநிலை சீர்குலையும் என்ற காரணத்தால் எதிர்ப்புத் தெரிவித்து வருவதும் தெரிந்தவையே.

(ஒ-6-9)

### இஸ்ரேல் மேற்குகரையில் திட்டமிட்டுள்ள

## யூதக் குடியேற்றங்கள் குறித்து விளக்கம் கோரியது அமெரிக்கா

மேற்குக்கரைப் பிரதேசத்தில் இஸ்ரேல் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள யூதக் குடியேற்றங்கள் குறித்து அமெரிக்கா விளக்கங்களை கேட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான மில்லியன் டொலர்களை யூதக் குடியேற்றத்திட்டங்களுக்கு செலவிட இஸ்ரேல் தீர்மானித்துள்ளது.

பலஸ்தீனர் உட்பட பல தரப்புகளின் கடும் விமர்சனங்களுக்கு மத்தியில், தனது கட்டுப்பாட்டில் உள்ள பலஸ்தீனப் பகுதிகளில் யூதக் குடியேற்றங்களை அமைக்கும் நடவடிக்கையை இஸ்ரேல் மேற்கொண்டுள்ளது.

இத்திட்டத்துக்கு 360 மில்லியன் டொலர்களை அமெரிக்காவிடமிருந்து பெற்றுக் கொள்ளப் போவதாக இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் கூறியிருந்தார் (ஒ-6-9)

### முதற்றடவையாக ஒத்திவைக்கப்பட்ட

## பிரிட்டிஷ் பொதுத் தேர்தல் அடுத்த மாதம் 7 ஆம் திகதி

பிரிட்டிஷ் ஜனநாயக வரலாற்றில் முதற்றடவையாக பிற்போடப்பட்ட பொதுத் தேர்தல் அடுத்த மாதம் 7 ஆம் திகதி இடம்பெறும். இதனை பிரதமர் டொனி பிளேயர் அறிவித்தார்.

பிரிட்டனில் கால்நடைகளுக்குஏற்பட்ட 'நீல நாக்கு' நோய் காரணமாக பொதுத் தேர்தல் ஒருமாத காலத்துக்கு ஒத்திப் போடப்பட்டிருந்தது.

4 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற தேர்தலில் 18 ஆண்டுகால கன்சர்வேடிவ் கட்சி ஆட்சிக்கு டொனி பிளேயர் தலைமையில் தொழிற் கட்சி முற்றுப் பெற்றது நினைவிருக்கலாம்.

கன்சர்வேடிவ் கட்சியினர் வெளியிட்டுள்ள இனவாதக் கருத்துகள் அக்கட்சிக்குப் பாதகமான நிலையைத் தோற்றுவித்துள்ளதாகவும். —

கன்சர்வேடிவ் கட்சியைவிட தொழிற் கட்சிக்கு எதிர்வரும் தேர்தலில் அதிக வாக்குகள் கிடைக்கும் என்று கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் பிரதமர் பிளேயர் தனது உத்தியோக பூர்வ இல்லத்திலிருந்து தேர்தலை அறிவிக்காமல் லண்டனில் ஒரு பாடசாலை விழாவில் வெளியிட்டது பாரம்பரியத்தை மீறிய செயல் என்றுகுற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ஒ-6-9)

## கண்ணீர் அஞ்சலி

யா/ நுணசை வித்தியாலய உப அதிபர்
திரு. ந. இரவீந்திரனின்
அன்புத் தந்தையும்
ஆசிரியை
திருமதி இ. நாகரஞ்சினியின்
மாமனாரும் ஆகிய

### சுப்பிரமணியம் நடராசா

அவர்கள் 5-5-2001 இல் இறைபதம் அடைந்தமையையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். ஆத்மா சாந்தி அடைவதாக!

யா/மாதகல் நுணசை வித்தியாலயம்,
யா/ மாதகல் சென் ஜோசப் ம.வித்தியாலயம்,
பாடசாலைச் சமூகம்.

(87617)

## மரண அறிவித்தல்கள்

### இராமன் பிச்சன்

(முன்னாள் ஊழியர் - பளை வைத்தியசாலை)

பளை, கச்சார்வெளியைச் சேர்ந்த இராமன் பிச்சன் (தலைவர்) நேற்று முன்தினம் (08-05-2001) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பத்தினிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சரஸ்வதி அம்மா, நடராசா (போதனா வைத்தியசாலை, யாழ்.) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ஐ கிருஷ்ணன் (நகரசபை, சாவகச்சேரி), சறோஜினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பவகுகன், பவலவன், பவஹம்சிகா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மானிப்பாய் கட்டுடையில் உள்ள இல்லத்தில் நேற்று (09- 05- 2001) புதன்கிழமை நடைபெற்று பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
பி. நடராசா
(மகன்)

30, வீட்டுத் திட்டம்,
கட்டுடை,
மானிப்பாய்.

(சி/16643)

### அம்பலம் சின்னத்துரை

பத்தமேனி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலம் சின்னத்துரை நேற்று (09-05-2001) புதன்கிழமை அச்சுவேலியில் உள்ள தனது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலம் - யோகம்மா தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் பவளம் தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் சசிகரன் (பிரான்ஸ்), சுதாகரன், ஜெயபாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கலைவாணியின் அன்பு மாமனாரும் நாகம்மா, வள்ளிப்பிள்ளை, இராசம்மா, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தனபாலசிங்கம், புஸ்பராணி, சிவனடி (பிரான்ஸ்), தனலட்சுமி, சிறீஸ்கந்தராஜா (கனடா), மகேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(10-5-2001) வியாழக்கிழமை பிற்பகல் 1-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகப் பத்தமேனி தீர்த்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
க. தனபாலசிங்கம்
(மைத்துனர்)

வைரவர் கோயிலடி,
பத்தமேனி,
அச்சுவேலி.

(87614)

### கனகசபை மார்க்கண்டு

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகக் கொண்டவரும் குவைத்தில் பணி புரிந்து வந்தவருமான கனகசபை மார்க்கண்டு 06-05-2001 அன்று குவைத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை, தெய்வானை ஆகியோரின் மகனும் கமலேஸ்வரியின் கணவரும் மதன், சுதன், ஜெகன் ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற வினாசித்தம்பி—பூரணம் தம்பதிகளின் மருமகனும் பரமேஸ்வரி (லண்டன்), யோகராசா (கொக்குவில்), கனகராசா (லண்டன்), விமலேஸ்வரி (கனடா), தங்கராசா (கனடா), இராஜேஸ்வரி (கனடா), பாலேஸ்வரி (கனடா), சுகுணராசா (லண்டன்), ஜெயராசா (கனடா), கலைச்செல்வி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வினாசித்தம்பி யோகராசா
(மைத்துனர்)

தலையாழி,
கொக்குவில்.

(87621)

## வணிகர் கழகம் அமைச்சருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், மே 10

நாணாவில், மட்டுவில், சரசாலை வணிகர் கழகப் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச் சந்திப்பு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கத்தவர்கள் அனைவரையும் சமுகமளிக்மாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

## அபிவிருத்தித் தொண்டர்கள் கவனத்துக்கு

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்தித் தொண்டர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோருக்கான நியமனக் கடிதங்கள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணத்தில் வழங்கப்படவுள்ளன

சம்பந்தப்பட்டவர்களை யாழ்ப்பாணம் அழைத்துச் செல்வதற்கான வாகன ஒழுங்குகள் ஈ.பி.டி.பி.யின் நெல்லியடிப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் நண்பகல் 12 மணிக்கு நெல்லியடி அலுவலகத்திற்கு வருகை தருமாறு அமைப்பாளர் தாசிக் அறிவித்துள்ளார். (க-117)

## ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா

ஆத்மஜோதி நா. முத்தையாவின் ஆன்மீக சொற்பொழிவுகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஊரெழு விநாயகர் ஆலயத்தில் நா. முருகையா தலைமையில் நடைபெறும்.

(க-117)

## செஞ். கப்பல் இம் மாதத்தில் 5 தடவைகள்

திருகோணமலைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையிலான செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் கப்பல் சேவை இந்த மாதத்தில் 5 தடவைகள் நடைபெறும்.

கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்ற முதலாவது சேவையைத் தொடர்ந்து இன்று இரண்டாவது சேவையும், எதிர்வரும் 17 ஆம், 24 ஆம், 31 ஆம் திகதிகளில் ஏனைய மூன்று சேவைகளும் இடம்பெறவுள்ளன.

இன்று இடம்பெறவுள்ள சேவையில் யாழ். குடாநாட்டுக்கான வெளியூர்த்தபால்கள் அடங்கிய 187 தபாற் பொதிகள் எடுத்து வரப்படவுள்ளன. (க-10)

## ஒழுங்கையை விஸ்தரிக்கக் கோரிக்கை

ஆவரங்கால் சந்தை வீதியில் இருந்து தெற்குப் பக்கமாகச் செல்லும் ஒழுங்கையை பிரதேச சபை பொறுப்பேற்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒழுங்கையைப் பயன்படுத்தும் பொதுமக்களின் சார்பில், மகாதேவன் என்பவர் வலி. கிழக்குப் பிரதேச சபைத் தலைவருக்கு இது குறித்து முறையீடு செய்திருந்தார்.

அதை அடுத்துப் பிரதேச சபைகள் வீதிப்பிரமாணத்தின் அளவுப்படி ஒழுங்கையை விஸ்திரணம் செய்தால், ஒழுங்கையைபொறுப்பேற்பது தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியும் என வலி கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம் அறிவித்துள்ளார். (க-11)


## பஜாஜ் BAJAJ

பஜாஜ் ரக மோட்டார் வாகனங்களின்
ஏக விற்பனையாளர்களான
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின்
யாழ்ப்பாண முகவர்களான
யாழ். ப. நோ. கூ. சங்கத்தில்
தற்போது நியாயமான விலையில்
விற்பனையாகிக்கொண்டிருக்கிறது.

சுய இயக்கத்துடன் கூடிய

### பஜாஜ் கிளாசிக் ஸ்கூட்டர்

மேலும் பின்வரும் ரக வாகனங்கள் விரைவில் வந்து சேரவுள்ளன.

* BAJAJ BOXER — ST
* BAJAJ LEGEND SCOOTER

மேலதிக விவரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
யாழ். ப. நோ. கூ. சங்கம்.

127, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/16649)


## மரண அறிவித்தல்கள்

### தாமோதரி கார்த்திகேசு

(மலாயன் சலூன் உரிமையாளர்)

கோண்டாவில் மிசன் பாடசாலை வீதியைச் சேர்ந்த தாமோதரி கார்த்திகேசு 08-05-2001 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரி தம்பதிகளின் ஏக புதல்வனும் காலஞ்சென்ற பெரியார் தம்பதிகளின் அருமை மருமகனும் காலஞ்சென்றவர்களான சின்னம்மா, சின்னாச்சி, மீனாச்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும் வேலுப்பிள்ளை (மாவிட்டபுரம்), வேலுப்பிள்ளை (மாதகல்), அம்பலம், நாகமணி ஆகியோரின் மைத்துனரும் அன்னம்மாவின் பாசமிகு கணவரும் சதானந்தன், வல்லிபுரம், நிர்மலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கதிர்காமு, முருகேசு (மலேசியா), அருமைத்துரை, செல்லம்மா, இலட்சுமி, சண்முகலிங்கம் (டோகா), சிவராசா (ஜேர்மனி), தேவராணி, செல்வராசா, காலஞ்சென்ற பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமனும் சதீஸ்வரன் (லண்டன்), சசிகுமார், சசிந்திரன், சசிருபா, சசிருபன், சஞ்சீபன், சுபித்தா, லக்சிகா, பிரியா, தினேஸ் ஆகியோரின் செல்லப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(10-5-2001) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணிக்குத் தகனக்கிரியைக்காகக் கோண்டாவில் ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
சதானந்தன் [மகன்]
வல்லிபுரம் [மகன்]

மிசன் பாடசாலை வீதி,
கோண்டாவில்.

(87623)

### யோசப் பாக்கியநாதன் (அன்ரன்)

நெடுந்தீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த யோசப் பாக்கியநாதன் நேற்று (09- 05- 2001) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற யோசப்(நெசவு மாஸ்ரர்) மாசிலாமணி (மகிழம்) ஆகியோரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற இசிதோர் லூர்த்தம்மா ஆகியோரின் மருமகனும், செல்வராணியின் (ஆசிரியை, நெடுந்தீவு மகா வித்தியாலயம்) பாசமிகு கணவரும், வேதாஞ்சினி, போல் நியூட்டன், கேசவரஜனி ஆகியோரின்பாசமிகு தந்தையும்,சதானந்தன் (மல்லாகம்), ஜெகநாதன் (உடையார்கட்டு), இன்பநாதன் (உரும்பிராய்), தங்கா, வேவி, ஸ்ரெலா, கிளி, வின்ரா (புதுக்குடியிருப்பு), கமலநாதன் (விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி, மன்னார்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மரியதாஸ் (ஜேர்மனி), இராசாத்தி (பிரான்ஸ்), இராசலிங்கம், அமிர்தலிங்கம், மகாலிங்கம், ஜெயலிங்கம் (நெடுந்தீவு), கொறற்றி, சகாயமலர், வேவி, பிரான்சிஸ், பவுலிஸ், தாசன், அமிர்தநாதர், அன்ரன், அமிர்தா ஆகியோரின் மைத்துனரும், மரியம்மா, திரேசம்மா ஆகியோரின் மருமகனும், கில்லறியின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (10-05-2001) வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு நெடுந்தீவிலுள்ள சேமக்காலையில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
இ. மரியசீலன்
(ஜெயலிங்கம் மைத்துனர்)

7ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு.

(87616)

## CENTRE FOR PERFORMING ARTS
**(Thirumarai Kalamanram)**

## SEMINAR

☆ ☆ ☆ ☆

**Titled** : "Some Contemporary Western Philosophers and their Philosophies"
**Speaker** : Rev. Prof.N.Maria Xavier
**Venue** : Kalai Thoothu Mani Mandapam
**Date** : Thursday, 10th May 2001
**Time** : 10.30 a.m.

***All are cordially invited***

*238, Main street,*
*Jaffna.*
T.P. 021/2393 (C/16639)

**J.Johnson Rajkumar**
General Secretary
*Centre for Performing Arts*


## கருத்தரங்கு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6,7,8,9,10,11 வகுப்புகளில் சுகாதாரம், உடற்கல்வி ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நாளை மறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணி முதல் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் நடைபெறும் என்று கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா அறிவித்துள்ளார். சகல ஆசிரியர்களையும் தவறாது கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறும் அவர்கேட்டுள்ளார்.


**ராஜா**
யாழ்ப்பாணம்
அஜித், லைலா
மற்றும் பலர் நடிப்பில்
**தீனா**
காட்சிகள்: 10.30,2.30 (புதிய நேரம்)

**லஷ்சுமி**
இணுவில்
இரண்டாவது வாரம்
விஜயகாந்த், ரம்யாகிருஷ்ணன், பிரகாஷ்ராஜ் நடிப்பில்
**வாஞ்சிநாதன்**
(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (புதியநேரம்)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
கமலஹாசன், ஜோதிகா, ஜெயராம், தேவயாணி
நடித்த
**தெனாலி**
(ரீல்ஸ் வெளியீடு)
காட்சிகள்: 11.00, 2.30 (புதிய நேரம்)


# கண்ணீர் அஞ்சலி



புனித வளன் கத்தோலிக்க அச்சக முன்னாள் அதிபர்
**அருள்திரு. அன்ரன் மத்தாயஸ்**
அடிகளாரின் அன்புத் தந்தையார்
## J.D.மத்தாயஸ்

அவர்களது பிரிவால் துயருறும் அடிகளாருக்கும் அவரின் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புனித வளன் கத்தோலிக்க அச்சக
அதிபரும், ஊழியர்களும்.

(87612)

# 31ஆம் நாள் நினைவலைகள்

மண் மகிழ
1932 - 04 - 30



கண் நெகிழ
2001 - 04 - 10

## அமரர் வெள்ளையர் இராசையா

ஊரெங்கும் உலா வந்த
உயிர்ப் பறவை யொன்று
பாரெங்கும் நாம் பதைக்க
எமை நீத்துப் போன தெங்கே?
வேரெங்கும் வெடித்த மரமாய்
பாறித்தான் போனோம் - எனி
யார் வந்து மீட்டெம்மை
உய்ய வழி காண்பாரோ?

அமரரின் துயரச் செய்தியறிந்து எமதில்லம் வந்து பல வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் இன்று (10. 05. 2001) வியாழக்கிழமை முற்பகல் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியையிலும் எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கோட்டைக்காடு,*
*மல்லாகம்.* (87611) -குடும்பத்தினர்.


"இந்துவின் மைந்தர்களே! வருகை தந்திடுவீர் நொந்தங்கு வாழ்கின்ற மாணவர் சிந்துகின்ற கண்ணீரைத் துடைப்பதற்கு வந்தெங்கள் கரங்களைப் பலப்படுத்துங்கள்"
'வாழிய யாழ்நகர் இந்துக் கல்லூரி வையகம் புகழ்ந்திட என்றும்'

## யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - ஐ.இ.

## JAFFNA HINDU COLLEGE - OBA (U.K)

*மூன்றாவது ஆண்டாகப் பெருமையுடன் வழங்கும்*

# ஐரோப்பிய கலையரசி
# 2001

**12.05.2001, 6.00 p.m.**

# ASSEMBLY HALL
## WALTHAM FOREST E-17

*பிரதம விருந்தினர்* :- பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
*(உப வேந்தர் யாழ். பல்கலைக்கழகம்)*
*வீணை இசை* :- ரூபவாஹினி புகழ் திருமதி சேய்மணி ஸ்ரீதரன்
*வயலின் இசை* :- SUN T.V. புகழ் திரு. K.T சிவகணேஷ்
*நாட்டிய நிகழ்ச்சி* :- திருமதி அன்னபூரணி சத்தியமூர்த்தியின் ஸ்ரீ மீனாட்சி பரதநாட்டியப் பள்ளி மாணவிகள்
இன்னிசை விருந்து :- RAINBOWவின் இன்னிசை நிகழ்ச்சியுடன் திரை இசை நடனங்கள்


அனைவரும் வருக!

*விவரங்களுக்கு :*
020 8517 3554 (அ.பீ. மரியதாஸ்)
020 8270 2428 (க.செல்வேள்)
020 8527 8586 (க.குமணன்)

**TICKET :- £10**
*தனிநபர் (இராப்போசனம் உட்பட)*
**UNDER 10 FREE**

*நிகழ்ச்சி ஆதரவு* :- **TTN T.V, ALPHA Telecom, ECAREER & ROYAL RIBS.** (C/16645)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர்**
## தில்லையம்பலம் பாலசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை அதிகாரியும், ஸ்ரீலங்கா புத்தகசாலையின் முன்னாள் பிரதம கணக்காளரும் - சமூகசேவையாளரும்)

மண்ணில்
20-01-1925

விண்ணில்
21-04-2000

**திதி. 10.05.2001**

"எங்கள் அன்பு அப்பா நீங்கள் எங்களை
விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள்
நினைவுகளும், உங்கள் வழிநடத்தல்களும் என்றும்
எங்களை விட்டு மறையா. நீங்கள் எமக்குக்
காட்டிய சீரான, நேரிய, முன்னேற்றப்பாதையில்
வாழ்ந்து காட்டி உங்கள் கனவுகளை நனவாக்குவதே
இந்நாளில் நாம் எடுத்துக்கொள்ளும் சத்தியமாகும்."

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!*

இன்று (10.05.2001) வியாழக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் எமது இல்லத்தில் நடைபெறும் விசேட பூஜையிலும், பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகிறோம்.

*ஆத்மசாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கும்:*
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*185/4, கில்னர் லேன்,*
*கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (37509)

## கோண்டாவில் பகுதியில் சம்பவம்

# கொள்ளையிட முயன்ற குழு இளைஞர்களிடம் சிக்கியது

### அகப்பட்டோர் நையப்புடைக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம்,மே10

நேற்று முன்தினம் பட்டப்பகலில் கோண்டாவில் பகுதியில் உள்ள கடையொன்றில் அதன் உரிமையாளரை மிரட்டிக் கொள்ளையிட முயன்ற குழு ஒன்று அப்பகுதி இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டது. பின்னர் கொள்ளையர்கள் இளைஞர்களால் நையப்புடைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் கொள்ளைக குழுவைச் சேர்ந்ததாகக் கூறப்படும் 16 வயதுச் சிறுவன் ஒருவன் கத்தி வெட்டுக்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். கோப்பாய் தெற்கு இருபாலையைச் சேர்ந்த சிறிகாந்தன் ரஜீவன் என்ற சிறுவனே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இவரிடம் இருந்த சில அடையாள அட்டைகள் மற்றும் ஒரு தொகைப் பணம் என்பன உட்பட பல பொருள்கள் ஆஸ்பத்திரி நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவை இந்தச் சிறுவனால் திருடப்பட்ட பொருள்கள் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் இந்தப் பொருள்கள் அனைத்தையும் தனது நண்பன் ஒருவனே தன்னிடம் தந்ததாக அச் சிறுவன் தெரிவித்தான்.

இதேவேளை -

ஏற்கனவே திருட்டுக் குற்றச்சாட்டு ஒன்றின் பேரில் இந்தச் சிறுவன் மீது கோப்பாய்ப் பொலீஸார் யாழ்.நீதிமன்றில் மனுத் தாக்கல் செயதுள்ளனர் என்று சிறுவனது பெற்றோர்கள் தெரிவித்தனர்.

சிறுவனுடன் பிடிக்கப்பட்ட ஏனையவர்கள் ஈ.பி.டி.பி. அமைப்பின் ஊடாக கோப்பாய்ப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-6)

### மிருசுவில் கொலைகளுக்கு நஷ்டஈடு

யாழ்ப்பாணம்,மே10

மிருசுவிலில் வீடு பார்க்கச் சென்ற சமயம் படுகொலை செய்யப்பட்ட 8 பேரின் குடும்பங்களுக்கும் தலா இரண்டு லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 19ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள மக்கள் குறை நிவர்த்தி சேவையின் போது இவர்களுக்கான நஷ்டஈட்டுத் தொகையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் வழங்குவார் என்று ஈ.பி.டி.பி. அமைப்பு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கபட்டுள்ளது. (ம)

### சீனப் பிரதமர் அடுத்த வாரம் கொழும்பு வருகை

கொழும்பு,மே10

சீனப் பிரதமர் சூ, றொங் ஜி மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் 17ஆம் திகதி இலங்கை வருகின்றார்.

19ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் அவர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்து உரையாடுவார். (உ)

### சிஹல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சோதனை நடவடிக்கை இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

தமது கட்சியின் அலுவலகம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதை சிஹல உறுமயக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலக் கருணாரத்தின கண்டித்துள்ளார். (ம)


## கண்ணீர் அஞ்சலி



### திருமதி மஞ்சுளாதேவி அமிர்தலிங்கம்

வட்டக்கச்சி கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது சுவிஸில் வசித்து வந்தவருமான சகோதரி மஞ்சுளாதேவி அமிர்தலிங்கம் அவர்களின் அகாலமரணச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அவரின் பிரிவால் கலங்கித் தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

(87629) - சகோதரன் மோகனதாஸ்

BIT ☞ IIS

நீங்கள்,



கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பட்டதாரியாக விரும்புகிறீர்களா?

அதை ஒரு நவீன கணனித் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய உத்தரவாதம் உள்ள நிறுவனத்தில் கல்வி பயில விரும்புகிறீர்களா?

ஆம் எனில்,

உடனடியாக எமது தலைமை அலுவலகத்திலோ அல்லது கிளை நிறுவனங்களுடனோ தொடர்பு கொண்டு விண்ணப்பியுங்கள்

எமது முதற் கட்டப் பதிவுகள் எதிர்வரும் 15ம் திகதி கொழும்பு பல்கலைக் கழகத்தில் இடம்பெற இருப்பதால்

14.05.2001 பிற்பகல் 4 மணிக்கு

முன் விண்ணப்பப்படிவங்கள் எமது அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

தெரிவுப் பரீட்சைக்கான முன்னோடி வகுப்புக்கள்
ஆரம்பம் 19. 05. 2001 - 3.00 pm

Institute of Informatics Studies
(Affiliated to Irish International University, Dublin.)


### வந்தாறுமூலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல் சுமார் ஒருமணி நேரம் கொம்மாந்துறை இராணுவ முகாமில் இருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

புலிகளின் அணி ஒன்றை அவதானித்த படையினர் அதன் மீது தாக்குதல் நடத்தியதாகவும் -

அதனை அடுத்தே மோதல் மூண்டதாகவும் -

இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

### சமஷ்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாதான ஆணைக்குழுக்களை நியமப்பது போன்ற விடயங்கள் குறித்து அரசு - புலிகள் பேச்சுக்களில் ஆராயப்படமாட்டாது.

இவை குறித்து, அரசமைப்பு சீர்திருத்தப்படும் போது அரசாங்கம் ஐதே. கட்சியுடன் பேச்சு நடத்தி, தீர்வு காணும் என்றும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மேலும் கூறியதாக கூட்டணிப் பிரமுகர் சொன்னார். (ம)

### அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேரணையை நிறைவேற்றுவதற்கு முதற்படியாக அமையும் என்றும் கருதுகின்றது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவுக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரனை ஒன்றை அல்லது குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து அதனை நிறைவேற்றவும் ஐ.தே.கட்சி முஸ்தீபு செய்து வருவதாக அக்கட்சியின் மேலிட வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

### மோதல் தவிர்ப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுத் தாம் நோர்வேத் தூதுவர் எரிக் சொல்ஹெய்முடன் நடத்திய பேச்சுக்களின் விவரங்களைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு அன்ரன் பாலசிங்கம் தெரியப்படுத்துவார் என்றும் -

அவை தொடர்பாகப் பிரபாகரனின் கருத்தை அறிந்து கொண்டதன் பின்னரே சொல்ஹெய்முடனான சந்திப்பின் பெறுபேறுகளை அன்ரன் பாலசிங்கம் வெகுஜனத் தொடர்பு சாதனங்களுக்குத் தெரியப்படுத்துவார் என்றும் - கூறப்பட்டது. (உ-7)

### இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவனல்ல மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது சிங்களவர்களின் கடைகள், சொத்துக்கள் என்பன அழிக்கப்பட்டுள்ளன. ஆனால இதற்குக் காரணமான முஸ்லிம்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இன்றைய ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று சிஹல உறுமய கட்சியின் தேசிய அமைப்பாளர் தம்மிக்க ரணவக்க தெரிவித்தார். (ம-7)


புதிய கணனிக் கற்கை நெறிகள் ஆரம்பம்

12.06.2001 பகல் 10.00 மணி

❋ 2001/2002 புலமைப் பரிசில் போட்டிப் பரீட்சையில் தோற்றி தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் உட்பட மேற்படி பிரிவில் பயிற்சி பெற விரும்பும் மாணவர்கள் அனைவரும் உடனடியாகத் தமது பதிவுகளை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

❋ வார, வார இறுதி நாள்களில் வகுப்புகள் இடம்பெறும்.

இயக்குநர்
IIS
(C/16632) யாழ்ப்பாணம்.

BRIGHTMAN
கல்வி நிலையம்
பிறவுண் வீதி, யாழ்நகர்
பிரிவு 4 சிங்களம்
BY:- லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம்: 12-05-2001. sat. 4.30
(873347)
O/L DAY CLASS நடைபெறுகின்றன


# யாழ்.குடாநாட்டில் இன்றுமுதல் மீண்டும் பெற்றோல் கிடைக்கும்

யாழ்ப்பாணம்,மே10

யாழ்.குடாநாட்டிலுள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் இன்று முதல் பெற்றோலைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று யாழ்.பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாதமும் 2 கப்பல்களில் பெற்றோல் எடுத்து வரப்படுவது வழமை. ஆனால் சென்ற மாதம் ஒரு கப்பலில் மட்டுமே பெற்றோல் எடுத்து வரப்பட்டது. இதனாலேயே அண்மைய சில நாள்களாக குடாநாட்டில் பெற்றோலுக்குத் தட்டுப்பாடு நிலவியது. இது தொடர்பாக பெற்றோலியக் கூட்டுத்தாபன உயரதிகாரிகளுடன் தொடர்புகொண்டு உடனடியாகக் குடாநாட்டுக்கு பெற்றோலை அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளோம்.

- என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

அதேநேரம் குடாநாட்டில் தற்போது பெற்றோலுக்கு ஏற்பட்டிருக்கும் உடனடித் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் காங்கேசன்துறை எரிபொருள் களஞ்சியத்தில் கையிருப்பில் வைக்கப்பட்டிருந்த பெற்றோலை இன்று எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள போதிலும் தனியார் கடைகளில் அதிக விலைக்கு பெற்றோல் தட்டுப்பாடின்றிக் கிடைக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தனியார்கள் ஏற்கனவே தாம் கொள்வனவு செய்து வைத்திருந்த பெற்றோலையே தற்போது விற்கின்றனர் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ம-4-6-10)


சுடர் ஒளி
வார இதழ்
நாளை கிடைக்கும்
- சர்ச்சையைக் கிளப்பிய புலிகளின் பல்குழல் ரொக்கெட் லோஞ்சர் விவகாரம்
- சாதுரியமாக வியூகம் அமைத்துக் காத்திருந்து தாக்கிய புலிகள்
- அரசின் சமாதான வேஷம் முழு உலகும் கண்டு கோபம்
- பாலாவின் தகவலோடு வருகிறார் சொல்ஹெய்ம்
- ஈ.பி.டி.பியின் கூட்டத்துக்கு ஏன் இந்தப் பாதுகாப்பு?
- மாவனல்லையில் நிகழ்ந்த பயங்கரம்
- வடக்கே கன்னியர் வாழ்வை குலைக்கும் பஞ்சாங்கக் குளறுபடிகள்

மற்றும் சுவையான அம்சங்கள்.
(C/16652)

அன்றைய - இன்றைய தலைமுறையினருக்கு ஏற்ற வகையில் CD மூலம் பாடல்ப் பதிவுகள்
★ புதிய, பழைய பக்திப் பாடல்கள், கர்நாடக சங்கீதப் பாடல்கள், வாத்திய இசைகள், வானொலி நாடகங்கள், கிராமியப் பாடல்கள்
★ உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசிச் சேவை
★ போட்டோப்பிரதிச் சேவை
★ தமிழ், ஆங்கில [Pyramid VCD] வாடகை
★ தமிழ், ஆங்கில VCD பிரதிகள் வாடகை
★ புதிய ஓடியோ CD கள் விற்பனைக்குண்டு
(பழைய, புதிய பக்திப் பாடல்கள்)

மிலேனியம்
ஓடியோ, வீடியோ சென்ரர்
238, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 3640
(87607)

31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 20-08-1901
உதிர்வு: 10-04-2001

அமரர் சபாபதிப்பிள்ளை மயில்வாகனம்
(முல்லைத்தீவின் பிரபல சோதிடரும் சித்த ஆயுள்வேத வைத்தியரும்)

திதி - திருதியை

எங்கள் குடும்ப ஒளிவிளக்காயிருந்து - எம்மையெல்லாம்
சீரும் சிறப்புமாக வாழவைத்த - அன்புத் தெய்வமே!
மாதமென்ன ஆண்டுகள் பல ஓடினும் - மறப்போமோ
உங்கள் நினைவுதனை - எம் வாழ்வில்

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
இறைவனை வேண்டுகின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குறிப்பு:- இன்று நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டி நிகழ்விலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

பத்தானை,
அல்வாய்க் கிழக்கு,
அல்வாய். (C/16654)

ம.மகேஸ்வரி (மனைவி)
மக்கள், மருமக்கள்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் (10.05.2001) இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.